# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
மார்கழி 2
முஹறம் 16
ஞாயிறு (17-12-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 57
விலை சதம் 60


# வடக்கில் சிங்கள ஆட்சி செயலிழந்தது?

## 45 வங்கிக் கிளைகள் மூடப்பட்டன! விமான நிலையமும் மூடப்படுகிறது!

வடமாகாணத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சிங்கள தார்மீக அரசாங்கம் தனது பாதுகாப்பையும் ஆட்சியதிகாரத்தையும் உறுதிப்படுத்தமுடியாதநிலையில், செயலிழந்து வருவதாக அரசியல் நோக்கர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். 45 வங்கிக்கிளைகளை திடீரென அரசாங்கம் மூடியிருப்பதும், விமானசேவைகளை நடத்தமுடியாது யாழ்ப்பாணம் எயர் சிலோன் அலுவலகம் மூடப்படுவதும் இதை ஊர்ஜிதம்செய்வதாக அவர்கள் கருத்துத்தெரிவிக்கின்றனர்.

யாழ்— திருநெல்வேலியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் வங்கிக்கொள்ளை கொலையைத் தொடர்ந்து, பாதுகாப்பளிக்க வக்கற்ற நிலையில் வடமாகாணத்திலுள்ள 45 வங்கிக்கிளைகளை ஒரே இரவில் மூடிவிட்ட அரசாங்கத்தின் செயல், அதன் ஸ்திரமற்ற தன்மையையே எடுத்துக்காட்டுவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

வங்கிக்கொள்ளை, கொலை நடைபெற்ருல் அவற்றைக் கண்டுபிடிப்பதும், குற்றவாளிகளைத் தண்டிப்பதும் தான் ஒரு நல்ல அரசாங்கத்தின் வேலையே தவிர— பொதுமக்கள் நலனுக்காக செயற்படும் வங்கிகளையெல்லாம் இழுத்து மூடுவதல்ல; அப்படி இழுத்து மூடியிருப்பது தமிழ் மக்கள் நலனில். அரசுக்கு இருக்கும் அக்கறையற்ற தன்மையையும், தமிழ் ஈழத்தில் தன்னுடைய பாதுகாப்பையும் ஆட்சியையும் கொண்டுநடத்தமுடியாமல் அரசு தவிப்பதையுமே எடுத்துக்காட்டுகிறது என்று அரசியல் நடுநிலையாளர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

இதேபோல யாழ்ப்பாணத்திலுள்ள 'எயர் சிலோன்' அலுவலகமும் மூடப்பட்டு, அங்குள்ள 23 அலுவலாளர்களை கட்டுநாயகாவுக்கு அரசு இடம் மாற்றியிருக்கிறது. இதற்கான சுற்று நிருபம் 11-12-78ல் அனுப்பப்பட்

—4-ம் பக்கம் பார்க்க

## வடபகுதிப்பாதுகாப்பு ஆயுதப்படைகளிடம்!

பொலிசாரில் நம்பிக்கை இழந்த சிங்கள அரசாங்கம் இப்போது வடபகுதிப்பாதுகாப்பை இராணுவத்திடமும் கடற்படையிடமும் ஒப்படைத்துள்ளது.

வங்கிகளையும் மற்றும் முக்கியஇடங்களையும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் இப்போது காவல்காத்து வருகின்றனர்.

பயணிகள் விமானநிலையமாக இருந்துவந்த வடபகுதியின் ஒரேயொரு விமானநிலையமான பலாலி விமானநிலையமும் மூடப்பட்டு அது விமானப்படைத்தளமாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

கொழும்புக்கும், திருச்சிக்கும் விமானப் போக்குவரத்துச்சேவை பலாலியிலிருந்தே கடந்தகாலங்களில் நடைபெற்றுவந்தது.

## பந்தம் பிடித்தால் பதவி கிடைக்கும்!

● செப்டம்பர் 7-ம் திகதி நிறைவேற்றப்பட்ட புதிய அரசியல் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தார் இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான்.

—அவருக்கு மந்திரிப் பதவி கிடைத்தது.

● புதிய அரசியலமைப்பில் தமிழ் மொழியின் உரிமை பாதுகாக்கப்பட்டிருப்பதாக சிலோன் டெயிலி நியூஸ் பத்திரிகையில் கட்டுரையெழுதினுர் சட்டத்தரணி சத்தியேந்திரா.

—அவருக்கு தொழிலமைச்சின் செயலாளர் பதவி கிடைத்தது.

● தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாடு கோரிக்கையை விட்டுவிட்டு, அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று பத்திரிகையில் அறிக்கை விடுத்தார் முன்னுள் நீதியரசர் மாணிக்கவாசகர்.

—அவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வேந்தர் பதவி கிடைத்துள்ளது.

## விசாரணைவேண்டுமென்றதும் விழிபிதுங்குகிருர் சிறில் மத்தியூ!

### "இன வீதத் திட்டத்தை எதிர்த்துப் போரிடுவோம்"

தமிழ் மாணவர்களுக்குத் தேர்வுகளின்போது தமிழ்ப் பரீட்சை அதிகாரிகள் சலுகை காட்டி அதிகபுள்ளிகள் கொடுத்ததாக கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் சிறில் மத்தியூ விஞல் கிளப்பப்பட்ட புரளியை தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர் திரு, மு. சிவசிதம்பரம், எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகிய இருவரும் கல்வியமைச்சு மானியம் மீது பாராளுமன்றத்தில் பேசுகையில் சுக்கு நூருக உடைத்தெறிந்தனர். சிறில்மத்தியூவின் இக் குற்றச்சாட்டு ஆதாரமற்றதென்பதை புள்ளிவிபரங்களுடன் நிருபித்த இவர்கள், இதுசம்பந்தமாகப்பாரபட்சமற்ற விசாரணையொன்றுக்கு ஜனுதிபதி உத்தரவிடவேண்டுமென்று வலியுறுத்தினர்.

ஆனுல் குற்றம் சுமத்திய சிறில்மத்தியூவோ இதுபற்றி. விசாரணை எதுவும் தேவையில்லையென்றும், ஆயிரம் விசாரணைகள் நடத்திஞலும் இதஞல் பயனில்லையென்றும், தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களை நியாயமான அடிப்படையில் பரிசோதிக்க எவருமில்லையென்றும் கூறிப் பின்வாங்கினர்.

### தார்மீகம் பேசுகிருர் மத்தியூ

அமைச்சர் சிறில்மத்தியூ மீண்டும் தமிழ் மக்களுக்கு எதிராக கொடிய 'தார்மீகத்தை' கக்கினர். அவர் கூறியிருப்பதாவது:—

''தமிழ் மாணவர்களுக்கு அதிகம் புள்ளிகள் அளித்ததன் மூலம் தமிழ் விரிவுரையாளர்கள் மோசடித்தனமாக நடந்துள்ளார்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். அதன் மூலம் சிங்கள மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு செல்லும் வாய்ப்புக்கள் பறிக்கப்பட்டுள்ளன. தமிழ், சிங்கள மாணவர்கள்தாம் விரும்பிய மொழியில் பரீட்சையெழுத 1968ம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டது. அன்று

—8-ம் பக்கம் பார்க்க

## சூருவளி நிவாரணத்திலும் இனப் பாரபட்சம்!

சூருவளியினுல் பாதிக்கப்பட்ட 21 இந்திய வம்சாவளித் தமிழ்க் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதில் பொலன்னறுவையில் இனப் பாராபட்சம் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் காணி அபிவிருத்தி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். சிங்களவர்களுக்கு மட்டுமே சூருவளி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ள அதே சமயம், இந்த 21 இந்திய வம்சாவளித் தமிழ்க் குடும்பங்களும் இன அடிப்படையில் பாராபட்சம் காட்டிப் புறக்கணிக்கப்பட்டுள்ளதை திரு. அமிர்தலிங்கம் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

## யூனெஸ்கோ மாநாட்டிலும் தமிழர் பிரச்சினை!

அண்மையில் பாரிஸ் மாநகரில் நடைபெற்ற 'யூனெஸ்கோ' மாநாட்டிலும் இலங்கையில் தமிழர் உரிமைகள் மறுக்கப்படுவது பற்றியும், தமிழர்களின் தனிநாடு கோரிக்கை பற்றியும் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளாலும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இதை அம் மாநாட்டில் சிறீலங்காவின் பிரதிநிதியாக கலந்துகொண்ட கல்வியமைச்சர் நிசங்கா விஜயரத்திஞவே கூறியிருக்கிருர்.

## ஐ. நா. சபையும் தமிழ் ஈழமும்

மேற்படி தலைப்பில் அண்மையில் ஐ. நா. சபைக்குள் புகுந்து தமிழீழ விடுதலை முழக்கமெழுப்பிய திரு. கிருஷ்ண வைகுந்தவாசன் எழுதியுள்ள ஆங்கில வெளியீட்டின் தமிழாக்கம் விரைவில் சுதந்திரனில் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்




தர்மவரதன்,
யாழ்ப்பாணம்;

கே; வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது கூட்டணி பா.உ,க்களின் பங்களிப்பு எப்படியிருந்தது?

ப: வரவுசெலவுத் திட்டத்தையொட்டி திருவாளர்கள் மு. சிவசிதப்பரம், அ. அமிர்தலிங்கம், சே, மா, செல்லத்தம்பு, பி. எஸ். சூசைதாசன் ஆகியோர் ஆற்றிய உரைகள் நன்ருக இருந்தன. ஆனுல் தமிழினத்தின் அரசியல் பிரச்சினைகள் மீது சிலர் பேசிய பேச்சில் ஒரு தெளிவற்ற தன்மையே காணப்பட்டது. முந்தியஅர

சின் தரப்படுத்தல் கொள்

கையால் தான் 'தனிநாடு'

கோரும் நிலைக்கு தமிழர்கள்

…தள்ளப்பட்டார்கள் என்

ருர் ஒரு பா.உ; அரசியல்

தீர்வு காணப்படாவிட்டால்

மட்டுமே தனி இராச்சியம்

என்ருர் மற்ருேர் பா. உ;

அரசியல் தீர்வு காணப்பட்

டால்அரசோடு இணைவோம்

என்ருர் இன்னேர் பா.உ.

இப்படியான பேச்சுக்கள் கூட்டணியின் முடிந்த முடிவான தனி நாடு கொள்கை மீது கூட்டணிப் பா. உ. க்களுக்கு நம்பிக்கையில்லை என்று மாற்ருர் நினைக்கவே பயன்படும்; 'தள்ளப்பட்ட' நிலையிலிருந்து, கூட்டணியின் நிரந்தரமான, மாற்ற முடியாத கொள்கையாக 'தனி நாடு' ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பு— அக் கொள்கைக்கு தமிழ் மக்களின் சம்மதத்தையும் பெற்ற பின்பு— இவ்வாருன வழுவழுத்த' பேச்சுகள் எதற்காக?

கே:- இன்றைய நிலையில் தமிழினத்தின் துரோகி யார்?

ப:- தமிழினத்தின் சரித்திரத்தில் முன் எப்போதுமில்லாத தேசிய அழிவு சூருவளியாலும், வெள்ளத்தாலும் தென் தமிழ் ஈழத்தில் ஏற்பட்டிருக்கிற இச் சமயத்திலும், வடக்கு, கிழக்கென்றும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணமென்றும் தமிழ் சமுதாயத்தை பிளவு படுத்த முனைபவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் துரோகிகளே; பேதங்களை அகற்றி ஒன்று திரண்டு தென் தமிழ் ஈழத்தை மீண்டும் கட்டியெழுப்ப அனைவரும் உழைக்க வேண்டிய நேரத்திலும் குறுகிய பிரதேச உணர்வை கொட்டுபவர்கள் தமிழினத்தின் கோடரிக் காம்புகளே!

* * *

எஸ், சுப்பிரமணியம்,
கொழும்பு-6.

கே: இந்தியா சென்றிருந்த ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அங்கு பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது கிழக்கு மாகாணத்திலுள்ள 13 தொகுதிகளில் ஒன்பது தொகுதிகளில் யூ. என். பி. வெற்றி பெற்றிருப்பதாக கூறியதாக இந்தியவானெலியும், பத்திரிகைகளும் தெரிவித்திருந்தனவே— இந்தக் கணக்கு சரிதாஞ?

ப: இந்தியப் பத்திரிகை நிருபர்கள் தொடுத்த கேள்விக்கணைகளின் வேகத்தினுல் ஜனதிபதி தடுமாறிவிட்டார்; அதனுல் அவருக்கு கிழக்குமாகாணத்தில் எத்தனை தொகுதிகள் என்ற கணக்கே மறந்துவிட்டிருக்கலாம்; பத்துத் தொகுதிகளை 13 தொகுதிகள் என்று நீட்டி முழக்கியிருக்கிருர். அவருக்கு உதவியாகசென்ற அதிகாரிக்கும் கிழக்குமாகாணத்தில் எத்தனை தொகுதிகள் என்ற விபரம்தெரியாது போலும்; ஜனதிபதியின் பேட்டியை பிரசுரித்த பத்திரிகைகளும் அதுபற்றிச் சிந்திக்காது அப்படியே அதை வெளியிட்டிருந்தன; கிழக்குமாகாணத்திலுள்ள பத்துத் தொகுதிகளுக்குரிய 12 ஆசனங்களில் எட்டு ஆசனங்களை யூ. என். பியும் 4ஆசனங்களை தமிழர் விடுதலைக் கூட்டணியும் வெற்றி கொண்டுள்ளன; இதுவே சரியான கணக்கு.

* *

எஸ். இராசதுரை,
யாழ்ப்பாணம்.

கே: திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் கேட்டவர்கள் யாழ்ப்பாணத்துக்கு முந்திய அரசாங்கம் ஒரு வளாகத்தை கொடுத்தவுடன், அதை ஏற்றுக்கொண்டு வாய்மூடி மௌனிகளாகி விட்டார்கள் என்று 'சகுனிமாமா' தேவநாயகம் பேசியிருந்தாரே— இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப: யாழ் வளாகத்தைத் திறப்பதற்கு முந்திய பிரதமர் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது, அவரது வருகையை எதிர்த்து 1974 அக்டோபர் 6ம் திகதி யாழ் குடாநாடு முழுவதும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆணைப்படி ஹர்த்தாலும், பகிஷ்கரிப்பும் நடைபெற்றதே— அதை சகுனிமாமா மறந்துவிட்டாரா? முந்திய அரசாங்கம் தன்னிச்சைப்படி யாழ்ப்பாணத்தில் ஒரு வளாகத்தை நிறுவியதே தவிர, கூட்டணியினரையோ, தமிழரசுக் கட்சியினரையோ கலந்தாலோசித்து இதை நிறுவவில்லை; 1965ம் ஆண்டு டட்லிஆட்சியின்போது, பல்கலைக்கழகம் நிறுவுவதுபற்றி தமிழரசுக் கட்சியினரின் ஆலோசனை கோரப்பட்டபோது, அவர்கள் ஒரே குரலில்திருகோணமலையிலேயே பல்கலைக்கழகம் நிறுவவேண்டும் என்று கோரியதை அப்போதுஅந்த அரசாங்கத்தில் அங்கம்வகித்த தேவநாயகமும் அறிவார். இம்மாதிரி 'கூனி' வேலைகளால் தமிழ் சமுதாயத்தைப் பிரித்துவிடமுடியாது.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு அரசாங்கத்தின்சிலசிரேட்ட அமைச்சர்கள் அடிக்கடி புகழாரம் சூட்டுவதேன்?

ப: காகத்தினுடைய வாயிலிருக்கும் வடையைப் பறித்து சாப்பிடுவதற்கு நரி பண்ணிய தந்திரம் போன்றதுதான் இதுவும். நரியின் புகழ்ச்சியில் மயங்கிய காகம் வடையை இழந்தது; அதேபோல அரசாங்க முன்வரிசை உறுப்பினர்களின் இனிப்பான புகழ்ச்சிப்பேச்சில் கூட்டணியினர் மதிமயங்கிளுல் அவர்கள் தம்மிடமிருக்கும் தமிழ் தேசிய இனத்தின்விலைமதிப்பற்ற இறைமையை பறிகொடுத்துவிடுவார்கள். தமிழ் மக்கள் கூட்டணியினரிடம் கையளித்திருக்கும் இறைமையைப் பறிப்பதற்குத்தான் இவ்வளவு இனிப்புப்பேச்சு!

* * *

க. மாணிக்கம்,
அச்சுவேலி வடக்கு,

கே, யூ. என். பி. யில் போதிய பெரும்பான்மைப் பலம் இருந்தும், தமிழ் பா.உக்களையும் பிடிக்கும் 'பகீரதப்பாடு' எதற்காக?

ப: தமிழ் தேசிய இனத்தின் இறைமையை அபகரிப்பதற்காகத்தான்!

* * *

வி. கனகராஜா,
நாவாந்துறை.
யாழ்ப்பாணம்;

கே: சுதந்திரனில் வெளிவரும் கருத்துக்களுக்கும் எமது பா. உ. ஒரு சிலரின் நடத்தைகளுக்கும் எவ்வளவோ வேறுபாடு உள்ளதே? தங்கள் கருத்தென்ன?

ப: எது சரியென்று உங்களுக்குப் படுகிறது? சுதந்திரனின் கருத்தா? நீங்கள் குறிப்பிடும் அந்தப் பா. உக்களின் நடத்தையா?

கே: மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும், ஒழுக்க சீலராகவும், இருக்க வேண்டிய அதிபர்களும், ஆசிரியர்களும், சமூகக்குறைபாடுகளை ஒழிக்கும் விடயத்தில் அநாகரீகமாக நடந்துகொள்கின்றனரே ஏன்?

ப: அப்படிப்பட்டவர்களை மாணவர்களே திருத்துவதற்கு முன்வரவேண்டும்.

* * *

முருகானந்தம்,
மானிப்பாய்.

கே: பாராளுமன்றம், கொழும்பிலிருந்து, கோட்டை இராச்சியமிருந்த செயவர்த்தன புரத்துக்கு இடமாற்றப்பட்டால் அதன் பின்பும் கூட்டணியினர் அங்கு செல்ல வேண்டுமா?

ப: அதன் பின்பும் அவர்களுக்கு சிறீலங்காப்பாராளுமன்றத்தில் வேலையில்லை. கோட்டை இராச்சியம் இருந்த இடத்தில் சிறீலங்காப் பாராளுமன்றம் கூடுகின்ற அதே நேரம் தமிழீழப் பாராளுமன்றத்தையும் கூட்டுவதே கூட்டணியினர் செய்ய வேண்டிய வேலை. அதைக் குறிக்கோளாகக் கொண்டு இப்பொழுதிருந்தே திட்டமிட்டுப் பணியாற்ற வேண்டும்!

* * *

க. நேசராணி.
நாவாந்துறை.

கே: தமிழ் மக்களுக்கு தனிநாட்டைத் தவிர மற்ற உரிமைகளையெல்லாம் கொடுத்துவிட்டதாக தார்மீக உத்தமர் புலம்பியுள்ளாரே—?

ப: தீக்கோழி தலையை மண்ணுக்குள் புதைத்துக் கொண்டு விடுவதால், உலகம் இருண்டு விடாது; உலகுக்கு உண்மை தெரியாமல் போகாது!

* * *

அ. விக்கினேஸ்வரன்,
நல்லூர்,
தமிழ் ஈழம்.

கே: சிறில் மத்தியூவின் தமிழ் இன விரோதப் பேச்சுக்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: சிறில் மத்தியூ என்ற தனிமனிதரின் கருத்துக்கள் அல்ல. இவை தனக்கு சிங்கள மக்களிடையே செல்வாக்கு வீழ்ச்சியடைவதாக தோன்றும் சந்தர்ப்பங்களிலெல்லாம் அரசாங்கமே சிறில் மத்தியூவைக்கொண்டு தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத நஞ்சைக்கக்க் வைக்கிறது. அப்படியில்லையென்ருல் தமிழ்த் துவேஷத்தைக் கக்கும் சிறில் மத்தியூவுக்கு எதிராக ஜனதிபதி இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தார்? எதுவுமில்லையே! அதுமட்டுமன்றி தமிழ்மாணவர்களுக்கு தமிழ் பேராசிரியர்கள் அதிகபுள்ளி போடுவதாக ஒரு அபாண்டத்தைக் கிளப்பினர் சிறில் மத்தியூ; அதன் விளைவாக இடபோது 30 வீதத்தை மட்டுமே திறமை அடிப்படைக்கு ஒதுக்கிவிட்டு, 55 வீதத்தை இன வீதாசாரத்துக்கு அரசு ஒதுக்கியுள்ளது. சிறில் மத்தியூவின் சுவிசேஷத்தையே அரசு நடைமுறையில் பின்பற்றுகிறது என்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா?

★ கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

திருவாளர் குயுக்தியார்
15, மகாத்மாகாந்தி வீதி,
யாழ்ப்பாணம்-

## துணிந்து விடு!

எந்தமிழ்த் தாய்க்குப் பாடை கட்டி— அவள்
செந்திருவாய்க்கு அரிசி யிட்டார்!
சந்தணமேனி சாகடித்தே— ஒரு
சாவினைக் கூறும் மணியடித்தார்!
எங்கடா? தமிழா ஓடுகின்ருய்!
எடுத்திடு விடுதலைப் பெருநோன்பு!
பொங்கடா! பொறுத்தது போதுமினித்
தொடுத்திடு கணைகள்! கொடும் .........
படைத்திடு! பதைத்தெழு! பார்வியக்கப்
புடைத்தெழு! ஒரு கொடிப் பேரணியை
வகுத்திடு! பிரிவுகள் அறுத்து விடு!
விதித்திடு உனக்கொரு தலை விதியை!

யாரடா? உன்னைத் தடுத்திடுவார்!
யாரடா? இனியும் பிரித்திடுவார்!
வேரொடு அறுத்திடு அடிமை யெனும்
பெருவசைச் சொல்லினை! தெருத் தெருவாய்ப்
போர்க் குரலெழுப்பிடு! இனம் முழுதாய்
விதைத்திடு விடுதலை விதை மணிகள்!
ஆர்த்திடு! அறுத்திடு; விலங்குகளை!
அரசினை நிறுவிடத் துணிந்து விடு!

—வட்டூர்ப் பங்கயமணாளன்

## சவர்க்கார உதவி

மில்க்வைற் தொழிலதிபர் கடந்தவாரம் 7000 சவர்க்காரம், 1000 ருத்தல் கருணைக்கிழங்கு ஆகியவற்றை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவசமாக அனுப்பி வைத்தார்.

அத்தோடு யாழ் வளாக மாணவர்கள் நிவாரணப் பொருட்களைச் சேகரித்தனுப்ப வாகன உதவிகளையும் கொடுத்துதவினர்.

## தமிழ் ஈழம் நாட்காட்டி

தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உக்களின் படங்களைத் தாங்கிய அட்டையுடன் விலை ரூபா 8-60

கிடைக்கும் இடம்:
க. சண்முகநாதன்(மணி)
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## இனும்

'வல்லவரும் நல்லவரும்' சான்ருேர் வரலாற்றுப் புத்தகம். ரூபா இரண்டு. வாங்குபவருக்கு பொற்கிழி நாடக நூல் பெறுமதி ரூ. 1.25 இனும். இருபத்தைந்து சத முத்திரைகள் அனுப்பிப் பெறவும். எஸ். பி. கிருஷ்ணன்—தென்மட்டுவில், சாவகச்சேரி.

## சுடர்
CHUDAR

(கார்த்திகை இதழ்)

**இப்போது எங்கும் விற்பனையாகிறது**

கலையெடுத்தல் வேண்டும்
—ஆசிரியத் தலையங்கம்

மேடை — நக்கிரன்

அந்த ஒருவன் வரவைத்தேடி
—லலிதப் பிரியா

புத்தபிரான் ஏன் ஓடுகிருர்
—முருகு

புண்ணியம் தேடும்
பக்தகோடிகள்—சீர்மாறன்

அக்கிரமங்கள்
அழிக்கப்படுகின்றன
—முத்துமாதவன்

மற்றும் கவிதைகள். சுடர் வட்டம், துணுக்குகளுடன்.
விலை ரூபா
ஒன்று மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணி தொடரட்டும் - பயன் விளையட்டும்!

அன்புநண்பா,

தமிழ் ஈழத் திருநாட்டினுடைய விடுதலைக்காக — தமது தாயகத்தின் அடிமைத்தனத்தைத் துடைப்பதற்காக — வெளிநாடுகளிலே வாழுகின்ற தமிழ் ஈழத்தவர்கள் சர்வதேச அரங்கிலே மேற்கொண்டுவருகின்ற தீவிர பிரசாரங்களையும், எடுத்து வருகின்ற நடவடிக்கைகளையும் நாம் அறிவோம். ஒரு நாட்டினுடைய விடுதலைக்கு சார்பாக வெளிநாடுகளினுடைய அனுதாபம் திருப்பப்பட வேண்டும்; சர்வதேச அரங்கிலே அந்த நாட்டினுடைய விடுதலைக் குரல் ஒலிக்கப்பட வேண்டும்; விடுதலைப் போராட்டத்திலே இஃதுமோர் முனையாக அமைய வேண்டும்: என்கிற அந்தக்கருத்திலே வெளிநாடுகளிலே வாழுகின்ற விடுதலை உணர்ச்சிமிக்க நமது மக்கள் — வெளிநாடுகளிலே இயங்குகின்ற தமிழீழ விடுதலை அணிகள் — தமது நேரம், நினைப்பு, உழைப்பு அனைத்தையும் செலவிட்டு ஆற்றிவருகின்ற பணிகள் வீண்போகவில்லை; அவமாக வில்லை; அது எந்த இடத்திலே தைக்க வேண்டுமோ அந்த இடத்திலே தைத்திருக்கிறது: எந்தஇடத்திலே உறைக்க வேண்டுமோ அந்த இடத்திலே உறைத்திருக்கிறது; என்பதை அறிந்திடும் போது நமது மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது!

ஆம் நண்பா, சிறீலங்காவின் பாராளுமன்றத்தில் இம்முறைநடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது—சிங்கள ஏகாதிபத்தியத்தின் அமைச்சர்களும், உறுப்பினர்களும் சிறீலங்காவுக்கு எதிராகவும், தமிழீழ விடுதலைக்குச் சார்பாகவும், சிறீலங்கா அரசின் இனக்கொலை நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியும் வெளிநாடுகளிலே நடைபெற்றுவரும் பிரசாரங்களைக்கண்டு பீதியடைந்து புலம்பியிருக்கின்றனர்; ஆத்திரத்தைக் கொட்டியிருக்கின்றனர்; எரிச்சல்கணைகளை ஏவிவிட்டிருக்கின்றனர்!

சர்வதேச அரங்குக்கு வந்துகொண்டிருக்கும் இந்த வழக்கில், சிங்கள சிறீலங்கா தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் இனக்கொலைக் குற்றச் சாட்டுக்களை—தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைமறுத்து, சட்டவிரோதமாக தமிழ் ஈழ மக்களின் இறைமையை அபகரித்துக்கொண்டிருப்பதாக அதன் மீது சுமத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்புக் குற்றச்சாட்டை—மறுக்க வேண்டிய நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளதென்ருல்—இப்படியொரு நிலையைத் தோற்றுவித்திடக் காரணமான வெளிநாடுகளில் இயங்கிவரும் தமிழீழ விடுதலை அணிகளின் இடையருத தொய்வில்லாத பணி நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டியதே!

லண்டனில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் போட்டியின் போது — விளையாட்டு மைதானத்தின் குறுக்கே படுத்து ஈழவிடுதலை முன்னணி வீரர்கள் மேற்கொண்ட அறப்போரிலிருந்து — ஐ. நா. சபையின் பொதுச் சபைக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைக் குரலை முதன் முதலாக ஒலித்த கிருஷ்ண வைகுந்தவாசனது வீரசாதனைவரை — லண்டனிலும் ஏனைய வெளிநாடுகளிலும் நடைபெற்ற தீவிர பிரசாரமும், தமிழர் விடுதலைக் கூட்டணி இங்கிருந்தே மேற்கொண்டிருக்கும் பிரசாரமும்—இன்று சிங்கள சிறீலங்கா அரசாங்கமே அஞ்சுகின்ற அளவுக்கு—இதைப்பற்றியே அவர்களும் பேசவேண்டிய அளவுக்கு — எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்றது போல அவர்களே தமிழர் பிரச்சினை குறித்து வெளிநாடுகளில் தாமாக எடுத்துக்கூறி எதிர்ப்பிரசாரம் செய்ய வேண்டிய அளவுக்கு — பாராளுமன்றத்திலே இதைப் பச்சையாக ஒப்புக்கொள்ள வேண்டிய அளவுக்கு — வெற்றி பெற்றுள்ளதென்ருல்— விடுதலைப்போராட்டத்தின் ஒரு முனையில் இது ஒரு குறிப்பிடத்தக்க அளவு சாதனையென்பதில் தடையில்லை!

''Everywhere in the world, I went, Governments were prepared to help, but they also wanted to know about Communal disharmony'?

—C. D. N. (29 11-78)

நான் போகும் நாடுகளிலெல்லாம் இதனையே கேட்கின்ருர்கள் — உங்கள் நாட்டில் இனக்கலவரம் எழுந்தால் நாம் எவ்வாறு தொழில்களை ஆரம்பிப்பது என்று கேட்கின்ருர்கள்''

— தினகரன் (29-11-78)

மேற்கண்டவாறு வரவு — செலவுத்திட்ட விவாதத்தின் போது பேசிய நிதியமைச்சர் ரொனி டீ. மெல் உண்மையைப் பச்சையாக ஒப்புக் கொண்டிருக்கிருர். அதாவது உலக நாடுகளுக்கெல்லாம் இங்குள்ள இனப்பிரச்சினை தெரிகிறது; இனங்களுக்கிடையே மோதல் இருப்பது தெரிகிறது; இதனுல் அவர்கள் இங்கு முதலீடு செய்யவோ, உதவிபுரியவோ தயங்குகிருர்கள் என்பதை நிதியமைச்சர் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிருர்.

இந்த அளவுக்கு உலக நாடுகளினுடைய கவனத்துக்கு—அக்கறைக்கு — இங்குள்ள சிங்கள — தமிழ் இனப்பிரச்சினை இன்றைக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறதென்ருல — அதை சிங்கள சிறீலங்காவின் நிதியமைச்சரே இப்படி பச்சையாக ஒப்புக்கொள்ள நேரிட்டிருக்கிறது என்ருல்—இதுசர்வதேச அரங்கில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரத்துக்கு கிடைத்த வெற்றியென்றே கூற வேண்டும்!

''வெளிநாடுகளில் வாழ்கின்ற சிங்கள இளைஞர் சங்கம் எமக்கு அறிக்கையொன்றை அனுப்பி வைத்திருக்கிறது; இந்தச் சபையின் சகல அங்கத்தினர்களுக்கும் அந்த அறிக்கையின் பிரதிகளை சங்கம் அனுப்பியுள்ளது. இலங்கையைப்பற்றி தவருன கருத்துக்கள் வெளிநாடுகளில் பரப்பப்படுகின்றன. இலங்கையைத் துண்டு போடுவது பற்றி வெளிநாடுகளில் பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது; ஆபிரிக்காவில் கறுப்பு இன மக்கள் மத்தியில் இங்கு எழுப்பப்படும் பிரிவினை பற்றி எடுத்துக் கூறப்படுகிறது; இலங்கையில் தமிழர்கள் எந்த உதவியுமின்றி அனுதரவாக நிற்கிருர்கள் என்று அங்கு சொல்லப்படுகிறது: பிரிட்டனில் டெலிவிஷனுக்கும் பத்திரிகைகளுக்கும் தவருன தகவல் கொடுக்கப்படுகிறது; இலங்கைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவியை நிறுத்தவும் அங்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அந்தச் சங்கம் தெரிவித்திருக்கிறது; வெளிநாட்டில் தமிழர்கள் அந்தமாதிரிப் பிரசாரம் மேற்கொள்ளுகின்றனர் என்ருல்—இங்குள்ள தமிழ்த் தலைவர்களே அவர்களை உசுப்பி விட்டிருக்கிருர்கள்!''

—தினபதி (23-11-78)

''நண்பா. வெளிநாடுகளில் நமது விடுதலை அணிகள் மேற்கொண்டிருக்கும் வேகமான மீட்சிப் பணிக்கு இவ்வாருக சான்றிதழ் கொடுத்திருக்கிருர் பாராளுமன்றத்தில் ஆளுங் கட்சியைச் சேர்ந்த திரு. வீரவன்னி சமரவீர என்பார்.

அரசாங்கத்தின் முன்வரிசை உறுப்பினர்களில் ஒருவரான அமைச்சர்காமினி திசநாயகாவோ, மேலும் ஒருபடி சென்று வெளிநாடுகளில் விடுதலைப்பிரசாரம் செய்யும் தமிழ் அறிவாளிகளை கடுமையாகச் சாடியிருக்கிருர்-

## அரசியல் மடல்

''லண்டன், நியூயார்க், ஒட்டாவா, சிட்னி, மெல்போர்ன் போன்ற நாடுகளிலே வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொறியாளர்கள், கணக்காளர்கள், டாக்டர்கள் ஆகியோர் அங்கிருந்தபடியே மற்ருேர் விடுதலைப்போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிருர்கள். அவர்கள் அந்த நாடுகளில் மூன்ருந்தரப் பிரஜைகளாக வாழுகிருர்கள். இப்பொழுது அவர்கள் அங்கே 'யுத்த' மொன்றை நடத்துவதுடன், தமிழர்கள் இலங்கையில் கொல்லப்படுகிருர்கள், வெட்டப்படுகிருர்கள், கொடுமைப்படுத்தப்படுகிருர்கள் என்று பிரசாரம் செய்கின்றனர்.''

இவ்வாறு அமைச்சர் காமினிதிசநாயகா வெளிநாடுகளிலுள்ள தமிழ்ப்புத்திஜீவிகள் மீது பாய்ச்சல் நடத்தியுள்ளார். ஆக, இவற்றிலிருந்து தெரிவது என்ன?

சிறீலங்கா அரசு ஆத்திரப்படுமளவுக்கு—பதற்றமடையுஅளவுக்கு— கவலைப்படுமளவுக்கு— எதிர்ப் பிரசாரம் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்படும் அளவுக்கு—தமிழீழவிடுதலை அணிகள் வெளிநாடுகளில் மேற்கொண்டிருக்கும் தீவிரபிரசாரம் வெற்றியளித்துள்ளது என்பதுதான்!

இனிமேல்தான் வெளிநாட்டு இயக்கங்களின்பணிமேலும் பொறுப்புடனும், திட்டமிட்டும் தீவிரமாகவும் நடைபெறவேண்டும். லண்டனில் தலைவர் அமிர்தலிங்கம் முன்னிலையில், திரு. வைகுந்தவாசனை அழைப்பாளராகக் கொண்டு, ஈழவிடுதலை இயக்கம், தமிழர் விடுதலைப் பேரணி ஆகிய இயக்கங்களை இணைத்து உருவாக்கப்பட்டுள்ள 'தமிழர் இணைப்புக்குழு'வே சர்வதேச நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ளவேண்டும்.

சிறீலங்கா அரசினுல், மனித உரிமைகளும். அரசியல்குடியியல் உரிமை சம்பந்தப்பட்ட ஐ. நா. வின் கட்டளையும் மீறப்படுகின்றன என்கிற உண்மை ஆதாரத்துடன் உலக அரங்கில் முன்வைக்கப்படவேண்டும்.

அமெரிக்க ஜனதிபதி ஜிம்மிகார்ட்டர், [illegible] உலகநாடுகளிலும் சர்வதேச அரங்கிலும் மனித உரிமைகளை வலியுறுத்தப்போவதாக திட்டவட்டமாக அண்மையில் அறிவித்திருக்கிருர். அறிவித்ததுடன் மட்டுமன்றி—தமது நேசநாடாக இருந்தும்கூட—ஈரானில் மனித உரிமைகள் மீறப்படுவதை ஜிம்மிகார்ட்டர் கடுமையாகக் கண்டித்திருக்கிருர். சிறீலங்காவின் அரசியலமைப்பிலும் ஆட்சியிலும் மனித உரிமைகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருப்பது ஜிம்மிகார்ட்டரின் கவனத்துக்கு ஆதாரபூர்வமாகக் கொண்டுவரப்படுமாயின் —ஈரானைக் கண்டித்த ஜிம்மிகார்ட்டர், சிறீலங்காவையும் கண்டிக்கத்தயங்கமாட்டார்.

சிறீலங்கா அரசு, மனித உரிமைகளை மீறுவது மட்டுமன்றி—தமிழ்த்தேசிய இனம்—தமிழ் ஈழமக்கள்—தமது இறைமையை பிரயோகித்து தம்மைத்தாமே ஆள்வதற்கும் முட்டுக்கட்டையாக இருக்கிறது: துப்பாக்கி முனையில் அவர்களை அடக்கியாள்கிறது; என்கிற பாரிய உண்மையை ஜிம்மிகார்ட்டர் போன்ற உலகத்தலைவர்களுக்கு எடுத்துக்கூற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்!

தமிழ் ஈழத்தில் தன்னுடைய பாதுகாப்பை நிலைநிறுத்தமுடியாதநிலையில்—தன்னுடைய ஆட்சியை நடத்த முடியாத நிலையில்— 45 வங்கிக்கிளைகளை திடீரென சிறீலங்கா அரசு மூடியிருக்கிறது. கொலையையும், கொள்ளையையும் தடுத்து நிறுத்தி மக்களின் நலன்களைக் கவனிக்கவேண்டிய ஓர் அரசு-கொலைகளையும் கொள்ளைகளையும் தடுக்கமுடியாத நிலையில் மக்களைத்தவிக்க விடுகிறதென்ருல்—இங்கு இவர்களால் ஆளமுடியவில்லை யென்பதுதானே அர்த்தம்! ஆளமுடியாத நிலையில், தமிழ்ஈழத்தை விட்டு வெளியேற வேண்டியதுதானே சிங்களஏகாதிபத்தியம்!

பொலிசாரை நம்பி தமிழ் ஈழத்தில்தமது ஆட்சியை நடத்த முடியாத நிலையில்— இப்போது இராணுவத்தையும் கடற்படையையும் நம்பியே சிங்கள ஏகாதிபத்தியம் நம்மை ஆள்கிறது!

இந்தநிலையில் சாம்பியா பிரதமர் திரு. டேனியல் நிஸுலோ புதுடெல்லியில் வைத்துத் தெரிவித்திருக்கும் ஒரு கருத்தும் விடுதலை விரும்பிகளால் விரும்பிவரவேற்கப்படவேண்டிய ஒரு கருத்தாகக் காணப்படுகிறது.

''விடுதலை இயக்கங்கள் அஹிம்சைமுறையில் நடத்தும் இயக்கங்களை இனவெறிபிடித்த அரசுகள் உணர்வதாக தெரியவில்லை; அஹிம்சைத்தத்துவங்கள் இனவாதிகளின் செவிகளில்ஏருது. எனவே தென்னுபிரிக்காவிலுள்ள விடுதலை இயக்கங்களுக்கு இராணுவ, பண உதவிகள் வழங்கப்படவேண்டும்'' என்று சாம்பியா பிர்தமர் விடுத்த கோரிக்கைக்கு இந்தியாவும் இணக்கம் தெரிவித்துள்ளது. வங்கமக்களின் போராட்டத்துக்கு பணமும் இராணுவமும் ஏற்கெனவே கொடுத்து உதவிய நாடல்லவா இந்தியா?

இன்று உலகநாடுகளிடம் ஆத்மீக ஆதரவைக் கோரிவரும் தமிழர் விடுதலைக்கூட்டணியும் அதன் சர்வதேச அணிகளும், பின்னேர் காலத்தில் சாம்பியா பிரதமரைப் போலக் கோரிக்கைவிடவேண்டிய சூழ்நிலை உருவாகுமா என்பது சிங்கள அரசின் எதிர்காலப் போக்கினைப் பொறுத்தே தீர்மானிக்கவேண்டிய விடயமாகும். இடைக்காலத்தில் விடுதலைப் பிரசாரம் வேகமுடன் தொடரட்டும்!

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிசாரின் அட்டூழியமே

## தனிநாடு கோரிக்கையை வளர்த்தது!

"சமீபத்தில் பொலிசுப் படைக்கு பலரை எடுத்தார்கள். ஆனல், போதிய அளவு தமிழர்கள் அந்தப் படையிற் சேர்க்கப்படவில்லை. அதை எவரும் மறுக்க முடியாது. பல்கலைக் கழக நுழைவுப் பரீட்சையில் தகுதி அடிப்படையைக் கைவிட வேண்டும். மக்கள் தொகையின் விகிதாசாரப்படி மாணவர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும் என்றெல்லாம் குரலெழுப்பப்படும் இந்நேரத்தில். தமிழ் மக்கள் தொகையின் விகிதாசாரப்படி கூட அண்மையில் சேர்க்கப்பட்ட பொலிசு உத்தியோகத்தர் இடம்பெறவில்லை என்று குறிப்பிட விருப்புகிறேன்.

அண்மையில் பொலிசுப் பரிசோதகர்களாக இருந்த பதினெட்டுப்பேர் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். அப்பதினெட்டுப் பேரில் தமிழர் ஒருவரும் இல்லை. தமிழர்கள் மட்டுமல்ல முஸ்லிம்களும் ஒருவருமில்லை. அதாவது அவர்கள் தமிழர்களாகவும் இருக்கவில்லை; தமிழ் பேசுபவர்களாகவும்இருக்கவில்லை.

அதுமட்டுமன்று இப்பொழுது தமிழ்ப் பகுதிகளில் இருக்கும் தமிழ் தெரிந்த ஏறக்குறையஎல்லாப்பொலிசாரையும் வெளியிடங்களுக்கு மாற்றுகிறர்கள். அந்த வெற்றிடங்களுக்குக் குறைவான தொகையினர் தான் அனுப்பப்படுகிறர்கள். எனவே, தமிழ்ப் பகுதிகளில் தமிழ் தெரிந்த பொலிசார் முன்பு இருந்ததிலும் பார்க்க 1979ஆம் ஆண்டில் குறைவாகத்தான் இருக்கப் போகிறர்கள். தமிழ்ப்பொலிசாரை எடுக்கவில்லை; அத்துடன் தமிழ்ப் பகுதிகளிலிருக்கும் பொலிசாரில் தமிழ் தெரிந்தவர்களைப் பிற இடங்களுக்கு அனுப்பி அந்த வெற்றிடங்களுக்குக்கூட தமிழ் தெரியாதவர்களை அனுப்புகிறர்கள். இதனல் அந்தப் பகுதிகளில் தமிழில் வாக்கு மூலம் பதிய விரும்புகின்ற மக்களுக்குத் தமிழில் வாக்கு மூலம் பதிய முடியாத நிலை உருவாகும். இது ஒருகணக்கு இதனை எவரும் மறுக்க முடியாது.

இப்பொழுது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகம் நடத்தப் புதியஅரசியலமைப்பில் வழி

### பாராளுமன்றத்தில் காவலூர் பா. உ.

வகுக்கப் பட்டிருக்கின்றதென்று சொல்கிறீர்கள். எனவே, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகத்தை நடத்துவதென்றல், வாக்குமூலம் பதிவது மட்டுமல்ல, பொலிசு நிர்வாகத்தையும் தமிழில் நடத்த வேண்டும். அப்படியானல் அதற்காக தமிழ் தெரிந்த பொலிசார் தாம் அங்கு இருக்க வேண்டும். தமிழ் தெரியாதவர்கள் இருந்தால் வாக்கு மூலத்தையும் தமிழில் பதியமுடியாது, நிர்வாகத்தையும் தமிழில் நடத்த முடியாது.

சென்ற அரசாங்க காலத்தில் பொலிசாரின் நடத்தையால் தான் தமிழ் மக்கள் வேதனையும், விரக்தியும் அடைந்தார்க்ள். ஒரு நாட்டைப் பிடிக்க அனுப்பிய படையினர் போல் சென்ற அரசாங்க காலத்தில் எங்கள் பகுதிகளில் பொலிசார் நடந்தார்கள். அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருந்த தமிழாராய்ச்சி மாநாட்டைக் குழப்பி ஒன்பது பேரின் உயிரைப் பலி கொள்ளக்காலாய் இருந்தார்கள். உண்மையிலேயே எம்மைக் கேட்டால் தமிழ் மக்களாகிய எங்களுக்கு இந்நாட்டிலே அதிகாரமெதுவும் இல்லை, எங்களுக்கென ஓர் ஆட்சி இல்லை. எங்களைப் பாதுகாக்க ஓர் அரசாங்கம் இல்லை. அந்த ஒரு பரிதாபமான நிகழ்ச்சிதான் தமிழ்மக்களின் உள்ளத்தில், நம்மை நாமே பாதுகாக்க வேண்டும், நம்மை நாமே ஆள வேண்டும் என்ற ஒரு தனி நாட்டுக்கொள்கையை உருவாக்கியது. அந்த சிந்தனை அந்தக் கரு தமிழ் மக்களுடைய உள்ளத்தில் வள்ர்ந்தது தமிழாராய்ச்சி மாநாட்டின் போது நடந்த அந்த சம்பவத்தால்தான். அம்மாநாட்டில் ஈடுபட்டிருந்த ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்களை விரட்டியடித்து, கண்ணீர்ப் புகைக் குண்டை வீசி ஒன்பது பேரைக் கொன்றபின்னும், அந்த அட்டூழியம் புரிந்த பொலிசார் மீது நடவடிக்கை எடுக்கப்படாததால், அச் சம்பவம் பற்றி விசாரிக்க ஓர் ஆணைக்குழு நியமிக்கப் படாததால்—தனிநாடு கேட்கவேண்டும்என்ற எண்ணம் எங்கள் உள்ளத்தில் மிக உறுதியாக வளர்ந்து வந்ததென்பதைக்கூற நாம் கடமைப் பட்டிருக்கிறேம்.

— பாராளுமன்றத்தில்
30-11-78

---

**தமிழர் விடுதலைக் கூட்டணி**
**தலைமைப் பணியக**
**வாராந்தக் கருத்தரங்கு**

காலம்:- 16-12-78சனிக்கிழமை மாலை 6-00 மணி.

''இறைமையை மீட்டுக் கொண்ட ஒருதேசிய இனம் ஐ. நா. உறுப்புரிமை கோரும் சாத்தியம்'' கூட்டணிப் பிரமுகர் உரை நிகழ்த்துவர்.

---

## எண்ணம்

# ஏனிந்த மூடுவிழா?

நல்லூர்த் தொகுதியிலுள்ள திருநெல்வேலி மக்கள்வங்கிக்கிளையில் காவலுக்கு நின்ற இரு காவலர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு பத்து இலட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாக சொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து நடைபெற்றுள்ள இரு நிகழ்ச்சிகள் இந்நாட்டில் தமிழ் மக்கள் உரிமை மறுக்கப்பட்டுள்ளவர்களாக அடிமைகளாகவே வாழ்ந்துகொண்டிருக்கிறர்கள் என்பதை எடுத்துக்காட்டிவிட்டன.

கொலைகள் எங்கும்தான்நடைபெறுகின்றன: கொள்ளைகள் எங்கும் தான் நடைபெறுகின்றன; ஆனல்சிங்கள நாட்டில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறும் போது—பொலிசார் இச்சம்பவங்களோடு தொடர்பற்ற சாதாரண அப்பாவி மக்களை— பெண்டுபிள்ளைகளை—தெருவாற் செல்வோரை— பேருந்துக்குக் காத்துநிற்போரை—தாக்கியதாகவோ கடைகளை அடித்து நொருக்கிச் சேதம் விளைத்ததாகவோ—கடைகளில் உள்ள பணத்தை அள்ளிச்சென்றதாகவோ நாம் கேள்விப்பட்டதில்லை!

ஆனல் தமிழ் ஈழத்தில்—எங்கு எந்த மூலையில் என்ன நிகழ்ந்தாலும்—பொலிசார் மிலேச்சத்தனமாக அப்பாவி தமிழ் மக்களை—பெண்டு பிள்ளைகளைத் தாக்குவதும், கடைகளை உடைப்பதும் வாடிக்கையாகிவிட்டது. தமிழ் மக்கள் ஆளப்படும் இனத்தினர்; அடிமைகள் என்ற மனேபாவத்துடன் பொலிசார் இவ்வாறு மிருகத்தனமாக நடந்துவருகின்றனர்; தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை 'ஆக்கிரமிக்கப்பட்ட' ஒரு நாடாகவே அவர்கள் கருதியுள்ளனர். இந்த உணர்வின் வெளிப்பாட்டை 1977 ஆகஸ்ட் கலவரத்தின்போதும் கண்டோம்; 1978 டிசெம்பர் 5ம் நாள் மாலை யாழ் நகரில் இடம்பெற்ற காடைத்தனத்தின்போதும் கண்டோம்.

இந்த நிலையில் மனித உரிமைகளைப்பற்றி கொழும்பில் ஜனதிபதி பெரிதாகப் பேசியிருக்கிறர். தமதுஆட்சியுள்ளவரை மனித உரிமைகளைப் பாதுகாக்கப்போவதாக அவர் கூறியுள்ளார். இந்நாட்டில் சட்டத்துக்குஅமைந்து வாழும் ஒரு தமிழன் தெருவிலே அச்சமின்றி நடமாட முடியாத நிலையிருக்கும்போது—பொலீஸ் காடைத்தனத்துக்கும், சிங்கள வெறியாட்டத்துக்கும் அவன் எந்த நேரமும் அஞ்சி அஞ்சி செத்துக்கொண்டிருக்கும்போது-எங்கே ஐயா உமது மனித உரிமை வாழுகிறது என்று ஜனதிபதியிடம் கேட்க விரும்புகிறேம்.

கொலைகள், கொள்ளைகள் இடம்பெற்றல்—குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதும், அப்படியான சம்பவங்கள் இடம் பெறமல் தடுப்பதும், ஆட்சிபீடத்திலிருப்போரின் பொறுப்பே தவிர—அது சாதாரணமக்களின் கடமையல்ல; இதற்காக சாதாரண மக்களைத் தண்டிப்பது தார்மீகமோ, ஜனநாயகமோ ஆகாது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வங்கிக் கொள்ளை, கொலைகளை துப்புத்துலக்கி, அவற்றைக் கண்டுபிடிப்பதை விடுத்து— அப்படியான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறமல் பாதுகாப்புக்களைப் பலப்படுத்துவதை விடுத்து—கிராமப்புற மக்களின் நலன்களையும்' வசதிகளையும் பாதிக்கும் விதத்தில்—அவர்களின் உரிமைகளை அபகரிக்கும் விதத்தில் —அவர்களை பழிவாங்கும் விதத்தில்— மொத்தமாக 45 வங்கிக்கிளைகளை உடனடியாக அரசாங்கம் மூடிவிட்டது. அரசின் இந்த எதேச்சாதிகாரமான நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறேம்.

தமிழ் பிரதேசங்களிலுள்ள தனது வங்கிகளுக்குப் போதிய பாதுகாப்புக்கொடுத்து, அவற்றை நடத்த முடியாத அவலநிலை அரசுக்கு வந்துவிட்டதா? அல்லது யாரோ ஒரு சிலர் நடத்திய கொலை, கொள்ளைக்காக தமிழ் மக்களின் வசதிகளையும், சலுகைகளையும் பறித்து அரசு அவர்களைப் பழிவாங்குகிறதா?

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள தனது நிறுவனங்களுக்குப் போதிய பாதுகாப்புக் கொடுத்து, அவற்றை நடத்தமுடியாத ஸ்தம்பித நிலை அரசுக்கு ஏற்பட்டுவிட்டதென்றல்—அதாவது ஆட்சி நடத்த முடியாத நிலை தோன்றிவிட்டதென்றல்—தமிழ ஈழத்திலிருந்து சிங்கள அரசாங்கம் கௌரவமாக வெளியேறி விடவேண்டுமே தவிர—சாதாரண மக்களின் வசதிகளைப் பறிக்கக்கூடாது.

ஒரு நாட்டில் ஓர் அரசாங்கம் தனது ஆட்சியை நடத்த முடியாத நிலை ஏற்படுமாயின்—அந்தநாட்டில் அரசியலமைப்பு செத்துவிட்டதென்றே பொருள்படும் என்று ட்ரயல்—அற்—பார் வழக்கின்போது அமரர் திருச்செல்வம் வாதிட்டிருந்தார். அதே நிலை தமிழ்ஈழத்தில் இப்போது தோன்றிவிட்டதாக அரசாங்கம் கருதுகிறதா?

தமிழ்மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் சலந்தாலோசிக்காமல்—வங்கி இயக்குனர் சபை உறுப்பினர்களுக்கே தெரியாமல்—எதேச்சாதிகாரமாக 45 வங்கிக்கிளைகளை அரசாங்கம் மூடிவிட்டதால்— சாதாரண ஏழை மக்களை பணக்காரவர்க்கம் உறிஞ்சுகின்ற நிலையே இனித் தொடரப்போகிறது; அரசின் இந்த நடவடிக்கை முதலாளித்துவ—பணக்காரவர்க்கத்துக்கே பயன்சேர்க்கிறது; பணக்காரரை மேலும் கொழுக்க வைக்கவே இது பயன்படப்போகிறது.

காலில் கல்லடித்தால்—அல்லது முள்ளுக்குத்திஞல்—காலையே வெட்டியெறியும் முட்டாள்தனமான ஒரு நடவடிக்கையே வங்கிக்கிளைகளுக்கு மூடுவிழா. அரசின் இந்த தன்னிச்சையான நடவடிக்கை—தமிழ் மக்கள் நலன் மீது அதற்கு எதுவித அக்கறையுமில்லையென்பதையே துல்லாம்பரமாக எடுத்துக்காட்டிவிட்டது.

## வடக்கில் சிங்--

—1-ம் பக்கத் தொடர்

டுள்ளது. சிறீலங்காவின் அரசியலமைப்புத் தினத்தன்று (7-9-78ல்) 250 மைலுக்கு அப்பாலுள்ள இரத்மலானை விமான நிலையத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற விமானம் 'டைம் பாம்' வெடித்து சேதமடைந்ததைத் தொடர்ந்து யாழ்— கொழும்பு விமான சேவை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதுதெரிந்ததே. இப்போது கொழும்பு —யாழ்ப்பாண விமான சேவையை முற்றாக கைவிடும் திட்டத்துடனேயே யாழ் ஏயர் சிலோன் அலுவலகம் மூடப்படுகிறதாக தெரிய வந்துள்ளது. அப்படியானல் — யாழ்ப்பாணத்திலிருந்து விமான சேவையை நடத்தக்கூடிய வல்லமையையும் அரசு இப்போது இழந்துவிட்டதா் என்று நடுநிலைப் பார்வையாளர்கள் கேட்கின்றனர்.

எங்கோஎப்படியோ நடைபெறும் வன்முறைச் சம்பவங்களுக்காக—அச்சம்பவங்களைத் தடுத்து நிறுத்த வக்கும் வகையுமற்ற அரசாங்கம், சாதாரண தமிழ் மக்களின் வங்கி வசதிகளையும், போக்குவரத்து வசதிகளையும் இல்லாமற் செய்து அவர்களை பழிவாங்க முயற்சிக்கிறது; இதுதான் ஜே. ஆர். ஜெயவர்த்தன பெரிதாக பீற்றிக் கொள்ளும் தார்மீகமா? புத்த பிரானின் தத்துவமா? என்று தமிழ்ப்பிரமுகர் ஒருவர் ஆத்திரத்தோடு கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சுயநிர்ணய உரிமையிலிருந்தே ஏனைய அடிப்படை உரிமைகள் கிடைக்கும்!"

## ராஜாஜி நூற்றுண்டு - மனித உரிமை விழாவில் கூட்டணித் தலைவர் பேச்சு!

"எந்த ஒரு தேசிய இனத்துக்கும் தனது தலைவிதியை தானே முடிவு செய்யும் சுயநிர்ணய உரிமை இருக்க வேண்டும். இந்த சுயநிர்ணய உரிமையிலிருந்தே ஏனைய அடிப்படை மனித உரிமைகள் யாவும் விரிவடைகின்றன. எனவேதான் தமிழ்த் தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமைக்காக — தன்னைத் தானே ஆளுவதற்காக இன்று போராடி வருகிறது"

இவ்வாறு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் 10-12-78ல் நடைபெற்ற ராஜாஜி நூற்றுண்டு விழா — மனித உரிமைகள் விழாவில் பேசிய நல்லூர் பா.உவும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. மு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

இவ்விழாவுக்கு முன்னுள் பேராசிரியர் திரு. கே. நேசையா தலைமை வகித்தார். திரு. நேசையா தமது தலைமையுரையில் கூறியதாவது:

"1972ம் ஆண்டும், 1977 ஆம் ஆண்டும் நிறைவேற்றப்பட்ட இரண்டு அரசியற் சட்டங்களும் எங்களுடைய சம்மதமின்றி-எங்கள் பிரதிநிதிகளின் இணக்கமின்றி— நிறைவேற்றப்பட்டவை— எனவே இவையிரண்டும் தமிழ் மக்களின் அரசியற் சட்டங்களாகமாட்டா. இவை எம்மைக்கட்டுப்படுத்தாது.

"இப்போது எம்மை ஒதுக்கி விட்டு அரசாங்கம் செயற்படுகிறது, பாராளுமன்ற உறுப்பினர்களையோ வேறுயாரையுமோ கலந்து பேசாமல் அரசாங்கம், தன்னிச்சைப்படி 40 வங்கிக் கிளைகளை வடமாகாணத்தில் மூடிவிட்டது, இதனுல் சாதாரண பொதுமக்கள் தொல்லையடைய நேரிடும். எம்மை எதிர்நோக்கும் இருளை, சத்தியம், உண்மை, அகிம்சை ஆகியவற்றின் துணைகொண்டு எதிர்ப்போம்" என்ருர்.

### சிவா பேச்சு

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"மூதறிஞர் ராஜாஜியின் அரசியல் வாழ்க்கையில் இரண்டு அம்சங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளன. இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் ஒன்றுபட்டு தமக்கு 'பாகிஸ்தான்'' வேண்டுமென்று கோரியபோது, அவர்களின் கோரிக்கை நியாயமானதென்று உணர்ந்து, பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுங்கள் என்றுகூறியவர்ராஜாஜி. மகாத்மா காந்தி, நேரு போன்ருேர் அப்போதே ராஜாஜியின் அறிவுரையைக் கேட்டிருந்தால், இந்து முஸ்லிம் கலவரமின்றி இருபகுதி மக்களும் சமாதானமாகப் பிரிந்து ஒற்றுமையாக வாழ வழியேற்பட்டிருக்கும்: பகைமை வளர்ந்திருக்காது.

இதேபோல இந்நாட்டுத் தமிழ் மக்களும் ஒன்றுபட்டு 1977 பொதுத் தேர்தலில் பிரிந்து வாழும் தமது அபிலாஷையை வெளிப்படுத்தி விட்டார்கள். தமிழ் மக்களின் இந்த அபிலாஷையை மதித்து தமிழ் ஈழத்தை சமாதானமாகப் பிரித்துத் தருவதற்கு சிங்களத்தலைவர்கள் முன்வந்தால், இத்தீவில் இரு இனங்களும் சச்சரவின்றி நட்புறவுடனும், ஒற்றுமையுடனும் வாழ முடியும்; இரு இனங்களுக்கும் இடையே பகைமையும் மோதலும் தோன்றுவதைத் தவிர்க்க முடியும்.

"ஆரம்பத்தில் தமிழ் நாட்டில் இந்தியைத் திணிப்பதற்கு கருவியாக இருந்த ராஜாஜி, பின்னர் இந்தியால் தமிழுச்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்து அதை கடுமையாக எதிர்க்க தொடங்கினுர். இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் மறக்க முடியாதவை.

"இன்றைய சிறீலங்கா அரசாங்கம் தனது அரசியலமைப்பில் அடிப்படை மனித உரிமைகளை வழங்கிவிட்டதாகப் பிரசாரம் செய்து வருகிறது ஆனுல் அரசியலமைப்பின் ஒரு விதியால் சில அடிப்படை உரிமைகளை வழங்கிவிட்டு, அவ்வளவு உரிமைகளையும் இல்லாமற் செய்யும் அதிகாரத்தையும் அதேஅரசியலமைப்பின் மூலம்பெற்றிருக்கிறது.

செப்டம்பர் 7ம் புதிய அரசியலமைப்பு வந்த பின்னர், இரண்டு தடவைகள் அடிப்படை உரிமைகளை மீறும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன, ஒன்று பல்கலைக்கழக மசோதாவில், மாணவர்கள் தமக்கென சங்கங்களை உருவாக்கும் உரிமை பறிக்கப்பட்டதாகும். மற்றது, பின்னுேக்கிப் பாயும்அதிகாரமுள்ள சனுதிபதி ஆணைக்குழுச் சட்டமாகும்.

முந்திய அரசு அவசர காலச் சட்டத்தின் கீழ்மேற்கொண்ட நடவடிக்கைகளை இன்றைய அரசு சாதாரண சட்டத்தின்கீழேயே செயற்படுத்துகிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் தடைச்சட்டத்தின் கீழ் எந்த ஒரு அரசியல் இயக்கத்தையும் தடைசெய்யவும், சந்தேகப்படும் எவரையும் தடுப்புக்காவலில் வைக்கவும் அரசு அதிகாரம் பெற்றுள்ளது. பிணைமறுப்புச் சட்டம், காலவரையறையின்றி எவரையும் விளக்கமறியலில்வைக்க அதிகாரமளிக்கிறது. இவ்வாறு சகல உரிமைகளையும் பறிக்கக்கூடிய சட்டங்களை கையில் வைத்துக்கொண்டு தான், மனித உரிமைகளை வழங்கிவிட்டதாக கூறி ஜே. ஆர். அரசு உலகை ஏமாற்றுகிறது.

### அமிர் பேச்சு

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

"ஈழத்தமிழ் மக்களுக்கு தம்மைத்தாமே ஆளும் சுயாட்சி வழங்கப்படாவிட்டால், 'இலங்கை' என்ற சீதை அன்னிய வல்லரசு என்ற அரக்கன்வசமாவாள் என்று இருபது ஆண்டுகளுக்கு முன்பே எச்சரித்தவர் மூதறிஞர் ராஜாஜி. இலங்கைத் தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் மனித உரிமைகளுக்கும் வாதாடிய பெரிய ஞானி அவர்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் நிறைவேற்றப்பட்ட மனிதஉரிமை சாசனத்தில் பலநாடுகள் கையெழுத்திட மறுத்தன; இலங்கை அரசு மனித உரிமை சாசனத்தில் கையெழுத்திட்டாலும், அந்த உரிமைகளை சட்டாயப்படுத்தும் குடியியல், அரசியல் உரிமை சம்பந்தமான 1966ம் ஆண்டு ஐ. நா. கட்டளையில் இன்னும் கையெழுத்து வைக்கவில்லை. அந்தக் கட்டளையிற் கையெழுத்து வைத்தால் தத்தம் நாடுகளிலுள்ள தேசிய சிறுபான்மை இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை மறுக்க முடியாமற் போய்விடும் என்று அஞ்சிப் பல நாடுகள் அதிலே இன்னும் கையெழுத்திட தயங்குகின்றன. வங்கமக்களுக்கு விடுதலை வாங்கித்தந்த இந்தியா கூட இன்னும் அதிலே கையெழுத்திடவில்லை.

உலகில் பல தேசிய இனங்கள் தமது விடுதலைக்காக இன்று போராடுகின்றன. பிரான்சில் பிரிட்டானியா மாகாணமக்கள், ஸ்பெயினில் பாஸ்க் இனமக்கள், எத்தியோப்பியாவில் ஈரிட்டேரியன் மக்கள், கனடாவில் குவீபெக் மக்கள், ரஷியாவில் உக்கிரயின் மக்கள் இன்று விடுதலைக்குப்போராடுகிருர்கள்.

"தேசிய இனங்களின் விடுதலை என்பது அந்த இனங்களின் பலத்தைப் பொறுத்ததே'' என்று அண்மையில் ஓர் நூலில் படித்தேன். வங்கதேசமக்களுக்கு இந்தியராணுவம் விடுதலை பெற்றுக்கொடுத்தது; அப்படியொரு உதவி கிடைக்காததால், பயாபிரா மக்களின் போராட்டம் தோல்வியுற்றது. எத்தியோப்பியாவில் ஈரிட்டேரியன் மக்களுக்கு ஆரம்பத்தில் உதவி புரிந்தசோவியத் யூனியன், இப்போது எத்தியோப்பியாவில் தனக்கு சார்பான ஓர் ஆட்சியேற்பட்டதும், ஈரிட்டேரியன் மக்களைக் காலை வாரிவிட்டது. இவ்வாறு சுயநிர்ணய உரிமைக்காக போராடும் தேசிய இனங்களை அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் நசுக்குவதை தடுப்பதற்கு ஐ. நா. சபையால் முடியவில்லை. தன்சீனியாவில் ஒருபழங்குடிஇனமே அழிந்துவிட்டது; அமெரிக்கா உருவாகியதே சிவப்பு இந்தியரின் அழிவிற்தான்.

"எனவே சுயநிர்ணய உரிமையை சகல தேசிய இனங்களும் சுதந்திரமாகப் பிரயோகிப்பதற்கு ஐ. நா. சபை ஏதாவது ஏற்பாடு செய்தாலன்றி ஐ. நா. சாசனம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான்.

இன்றைக்கு கிராமிய மக்களுக்கு பயன்தரும் 40வங்கிகளை யாரையும் கேளாமல் வடமாகாணத்தில் அரசு இழுத்து மூடிவிட்டது. கொலை, கொள்ளை நடைபெற்ருல்—அதிலிருந்து மக்களை காப்பதுதான் காவலரின் கடமையேதவிர இருக்கின்ற மக்களின் வசதிகளைப் பறிபபதல்ல; ஆட்சிநடத்துவதற்கு திராணியில்லையென்ருல், ஆட்சியை விட்டு வெளியேறுவதே ஒரு யோக்கியமான அரசின் கடமை.''

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி திரு. கந்தையா ஆகியோரும் பேசினர்.

---

# கிழக்கு மாகாணத்தில் தமிழ் இளைஞர்களின் சேவைக்கு தலைவர் அமிர்தலிங்கம் பாராட்டு!

கிழக்கிலங்கையில் சூருவளியினுல் பாதிக்கப்பட்ட கல்குடா, மட்டக்களப்புபட்டிருப்பு, கல்முனை தொகுதிகளிலுள்ள பல்வேறு கிராமப் பகுதிகளை தமிழீழ முதல்வரின் தலைமையில் சென்ற குழுவினர் பார்வையிட்டதோடு மக்களின் குறைகளை நேரில் கண்டு அறிந்தனர். இக் குழுவில் பட்டிருப்பு எம்.பி திரு. பூ. கணேசலிங்கம், கலகுடாத்தொகுதி த. வி. கூட்டணி பிரதம அமைப்பாளர் திரு. சம்பந்தமூர்த்தி, தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. சந்ததியார், தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பு கிளைத்தலைவர் ஈழவேந்தன் தமிழ் தொழிற் சங்க கூட்டணியின் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன்; தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. வணசிங்கா திரு. அம்பலவாணர் மற்றும்பலர் சென்றிருந்தனர்.

சிறீலங்காப் பிரதமருடன் மட்டுநகருக்கு வந்திருந்த திரு. அமிர்தலிங்கத்தை பட்டிருப்பு தேசிய [பேரவை] உறுப்பினரும் தமிழ்இளைஞர் பேரவையினரும்; தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியினரும் வரவேற்றனர். பின்னர் இக் குழுவினர் திரு. அமிர்தலிங்கம் தலைமையில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு பகுதிக்கும், பட்டிருப்பு தொகுதிக்கும், கல்முனை தொகுதிக்கும் சென்றிருந்தனர். சூருவளியினுல் பாதிக்கப்பட்ட மக்கள் வழிநெடுகிலும் குழுமியிருந்து அவர்களது குறைபாடுகளை தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கத்திற்கு எடுத்துக் கூறினர். அரசாங்க உணவு விநியோகத்தில் பாகுபாடு காட்டப்படுவதாகவும்; சில பகுதிகளுக்கு சரியான முறையில் விநியோகிக்கப்படுவதில்லை என்றும் மட்டக்களப்பு பகுதிகளிலுள்ளவர்களுக்கு புடவை துப்பரவாககொடுக்கப்படவில்லை என்றும், மருத்துவ சேவைகள் நடைபெறவில்லை என்றும் பல தரப்பட்ட குறைபாடுகளை மக்கள் எடுத்துக் கூறினுர்கள். இவற்றை எல்லாம் ஜனுதிபதியின் மகாநாட்டில் எடுத்துக்கூறி நிவாரணம் [illegible] அமிர்தலிங்கம் கூறினுர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றுவதற்கு தொண்டர் நிலையங்களையும் திரு. அமிர்தலிங்கம் குழுவினர் சென்று பார்வையிட்டுள்ளார்கள். தமிழ்இளைஞர் பேரவையின் ஆதரவில் திரு. சந்ததியார் தலைமையில் இயங்கி வரும் பாண்டிருப்பு தொகுதி தொண்டர் முகாமை இரவு 10 மணியளவில், சென்று பார்வையிட்டார். தொண்டர்கள் ஆற்றி வரும் பணியை திரு. அமிர்தலிங்கம் பாராட்டியதோடு நல்ல நோக்கத்திற்கு வந்த நீங்கள் நல்ல பிள்ளைகள்! என்ற பெயரோடு செயற்பட வேண்டும் என்று அறிவுரை கூறினுர்.

தமிழ் இளைஞர் பேரவையின் மட்டக்களப்பு அரசடி முகாமிலுள்ள தொண்டர் படையினர் பல ஆக்கபூர்வமான சேவைகளை ஆற்றி வருவதையும் நேரில் கண்டு அறிந்தே கல்குடாத் தொகுதியில் மற்றுமோர் தொண்டர் முகாம் அமைப்பதற்கு திரு. சந்ததியாரும் தொழிற்சங்க கூட்டணியும் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். கல்குடாத் தொகுதியிலுள்ள செங்கலடி, வந்தாறுமூலை, சித்தாண்டி, கிரான், வாழைச்சேனை, நாச்சிமாவைதீவு, ராலோடை போன்ற பல இடங்களையும் இக்கோஷ்டியினர் பார்வையிட்ட போது, அரசியல் பாகுபாட்டால் ஒரு பகுதி மக்களுக்கு நிவாரண உதவிகள் கிடைப்பதில்லை என்று தெரிய வந்தது. மருத்துவசேவை, சீராகஇல்லாததால் வயிற்ருேட்டம், கொலரு போன்ற நோயினுல் பாரதூரமாக பாதிக்கப்பட்டு வருவதாகவும் அத்தொகுதி மக்கள் குறைபாடு செய்துள்ளனர்.

"சூருவளியினுல் பாதிக்கப்பட்டு கோப நிலையில் மக்கள் இருக்கும்போது கல்குடா தொகுதியில் அரசியல் பாகுபாடு தாண்டவமாடுவதை அறிந்து வேதனை அடைந்தோம். இவ்வாறு தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்ப் பிரசாரத்தை தவிடுபொடியாக்கும் புள்ளி விபரங்கள்

# "பழி சுமத்திய சிறீவர்த்தன பகிரங்க மன்னிப்புக்கோர வேண்டும்!"

இலங்கைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேராசிரியர் பீ. பீ, ஜீ. எல். சிறீவர்த்தன யாழ்ப்பாண வளாக பொது அறிவியல் தகுதிக் தேர்வில் பல குழறுபடிகள் இடம் பெற்றதாக நவம்பர் 10ஆம் நாள் நடாத்திய பத்திரிகையாளர் விசேட கூட்டத்தில் குற்றம் சாட்டியிருந்தார்.

பொறுப்புவாய்ந்த பதவியிலுள்ள துணைவேந்தர் அரசியல்வாதிகளின் வலையில் விழ்ந்ததால் பிரசவித்த தப்பும் தவறுமான இந்த அறிக்கையை ஆராய்ந்து யாழ் வளாக விஞ்ஞான மாணவர் மன்றம் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அமைச்சர்களும் உயர்கல்விப்பீடாதிபதிகளும் இனவாரியான தரப்படுத்தலை மீளப் புகுத்துவதற்கு எத்தனை பொய்ப் பிரசாரத்தினை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை இந்த அறிக்கை அம்பலப்படுத்துகிறது.

யாழ். வளாக மாணவரிடமும் ஆசிரியர்களிடமும் துணைவேந்தர் மன்னிப்புக் கோர வேண்டும் என்று இந்த அறிக்கை கூறுவதை 'சுதந்திர'னும் வழி மொழிகிறது.

இலங்கைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பீ. பீ.ஜீ.எல். சிறீவர்த்தன பத்திரிகையாளர் மகாநாட்டில்யாழ்ப்பாண வளாகத்தில் நடைபெற்ற பொது விஞ்ஞானத்தகுதித்தேர்வுப் பரீட்சையில் மோசடிகள் நடைபெற்றுள்ளதாகவும் இது பற்றிஆராயுமென்றும் கூறியிருந்தார்.

எமது துணைவேந்தர் இந்த அறிக்கையை இதுவரை மறுக்காத காரணத்தினால் அவர் அத்தகைய அறிக்கையை உண்மையாகவே வெளியிட்டார் என்பதை நம்பவேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இந்த அறிக்கை பல அம்சங்களில் தவறுள்ளதாகவும் தப்பபிப்பிராயங்களை உருவாக்கக் கூடியதாகவும் உள்ளது; குறுகிய நோக்கமுள்ளவர்கள் பயன்படுத்தக்கூடிய கருவியாகவும் அமைந்துளது. பல்கலைக் கழகத் துணைவேந்தரும் நாடுமுழுவதும் ஆதர்சமாக நோக்கும் கல்வி மானும் ஆகிய ஒருவர் தமது நிர்வாகத்துக்குட்பட்ட ஒரு நிறுவனத்திற்குத்தீங்கிழைக்கும்வகையிலும் தமக்குக் கீழ்ப்பணியாற்றும் சிறப்பும் பொறுப்பும் வாய்ந்த ஒரு பகுதியினரை அவதூறுசெய்யும் வகையிலும் அறிக்கை வெளியிட்டது குறித்து நாம் வியப்பும் அதிர்ச்சியும் அடைந்தோம். வேண்டிய தகவல்களை முழுமையாகவும் தடையின்றியும் பெறக்கூடிய அதிகாரத்திலிருந்து கொண்டே அவர் இதனைச் செய்துள்ளார்.

(1) யாழ் வளாகத்தில் பொதுவிஞ்ஞானத் தகுதித் தேர்வு என்ற பெயரில் ஒரு தேர்வு நடைபெறுவதில்லை என்பதைத் துணைவேந்தர் அறியாதிருக்கமுடியாது.

(2) விஞ்ஞான முதல் நிலைத் தேர்வை அவர்கள் இப்பெயரால் குறித்திருப்பாராயின் அத்தேர்வில் தோற்றுபவர்களுக்கு பெறுபேறுகளுக்கேற்ப வகுப்புக்கள் வழங்கும் முறை யாழ் வளாகத்தில் நடைமுறையில் இல்லை என்பதை அவர் அறிந்திருக்கவேண்டும். யாழ் வளாகத்தில் மட்டுமல்லாது வேறெவ்வளாகத்திலாவது இம்முறை இருப்பதாக நாம்அறியோம்.

(3) 1977இல் நடாத்தப்பட்டவிஞ்ஞானப் பொதுப் பட்டத் தேர்வில்தோற்றியவர்களுக்கு மட்டுமே யாழ் வளாகத்தால் வகுப்புக்கள் வழங்கப்பட்டன. ஆனால் இத்தேர்வு தமிழ்மொழி மூலம் நடத்தப்படவில்லை. ஆனால் துணை வேந்தரோ தமிழ் மொழி மூலத் தேர்வில் முதலாம் இரண்டாம் வகுப்புக்கள் வழங்கப்பட்டதாகக் கூறுகிறார். தமிழ் மாணவர் அனைவரும் ஆங்கில மொழி மூலமே இத்தேர்வுக்குத் தோன்றினர். இவ்விடைத்தாள்களை தமிழரல்லாத பரீட்சகர்களும் பார்க்க முடியுமென்பதையோ சிங்களப் பரீட்சகர்களும் இவற்றை மதிப்பிட்டார்கள் என்பதையோபொதுமக்கள் எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்? இந்தச் சூழலில் இதில் எவ்வாறு தவறுகள் இடம் பெற்றிருக்கமுடியும்?

(4) துணை வேந்தர் ஆங்கில மொழிமூலம் (சிங்கள மொழிமூலம்) நடைபெற்ற விஞ்ஞானப் பொதுப் பட்டதாரித் தேர்வையே குறிப்பிடுவதாயின் அத்தேர்வில் மூன்றும் வகுப்பு வழங்கப்படுவதில்லை என்பதனைஅவர் அறிந்திருக்க வேண்டுமே. (இந்த நாட்டின் வேறு எப் பல்கலைக் கழகமும் மூன்றும் வகுப்பு வழங்குவதை நாம் அறியோம்). சாதாரண சித்தியையே அவர் மூன்றும் வகுப்பு எனக்குறிப்பிட்டிருப்பாராயின் 10 தமிழ் மாணவர்கள் சாதாரண சித்திபெற்றிருப்பதை அவர் அறிந்திருக்க வேண்டும். உயர்ஆணை பெற்றஒருவரின் தவறுகள் மலிந்தஇந்தஅறிக்கையைச் சான்று காட்டுவோர் இதனை எவ்வாறு பயன்யடுத்துவர்என்பதற்கு நாம் விளக்கம் தரவேண்டியதில்லை.

(5) துணைவேந்தர் சொல்லாமல் விடுத்தது ஒன்று சொன்னவற்றை விடத்தவருன வழிகாட்ட வல்லதாக உள்ளது. அவர் முதலாம், இரண்டாம் பிரிவில் சித்தி பெற்றோரின் உயர் விகிதம் பற்றிக் குறிப்பிட்டார். மிக உயர்ந்த சதவீதத்தினர் சித்தி யெய்தத் தவறியது பற்றி நாம் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். 35.% தமிழ் மாணவர் சித்தியெய்தத் தவறி விட்டனர்.

எனவே, துணை வேந்தரின் கூற்றினால் நாம் அதிர்ச்சியடைந்ததில் வியப்பில்லை. நாம் பல்கலைக் கழகத்திற் பயிலும் அநுபவமற்ற இளைஞர்கள். கல்வியுலகின் மேன்மையான வளம்நிறைந்த உச்சியில் இருப்போருடைய வழிகாட்டலையும் முன்மாதிரியையும் நாம் நாடிநிற்கிறோம். சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட நிருபர் கூட்டத்தில் துணைவேந்தர் ஏன் இந்த அறிக்கையை வெளியிட்டார் என்பதை அறியாது நாம் குழம்பி நிற்கிறோம். (உயர்கல்வி அமைச்சின் பணியாளரான பத்திரிகையாளர் கூட்டத்தை ஏற்பாடுசெய்த தொழில், விஞ்ஞான அமைச்சருடன் ஏன் தொடர்பு கொண்டார் என்பதை எம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அறிவுலக மேதைகள் அரசியல் வாதிகளின் பேச்சாளர்களாக மாறுவதற்கு இது ஓர் உதாரணமா?) துணைவேந்தரிடம் புள்ளி விபரங்கள் இல்லையா? அவருடைய அலுவலகத்தில் அவரது பொறுப்பில் உள்ள தரவுகளை ஆராய்ந்து உறுதிசெய்யாது தீங்கிழைக்கும் அறிக்கையை வெளியிட்டது ஏன்? தேர்வுப் பெறுபேறுகள் வெளியாகி ஏழுமாதங்களுக்குப் பின்பே அவர் இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளமையால் ஏதாவது தவறு நடந்திருக்கலாம் என ஐயம் ஏற்பட்டால் அவர் அதுபற்றிப் பூரணமாக ஆராய்ந்திருக்கலாம். இந்தக் காலகட்டத்தில் அவர் இருமுறை யாழ் வளாகத்துக்கு வருகைதந்துள்ளார். இப்போது இந்த அறிக்கையை வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு எப்படி ஏற்பட்டது?

பொதுமக்களுக்குஉண்மைகளைத் தெளிவாக முன்வைக்க வேண்டிய பொறுப்புவாய்ந்த துணைவேந்தர் அல்லது யாழ் வளாகமுதல்வர் தமது கடமையில் தவறிவிட்டார்கள். இதற்கான காரணங்களை அவர்களே அறிவர் துணைவேந்தரின் யாழ் வளாகப் பட்டம் பற்றிய உண்மை திரிந்த அறிக்கை காரணமாக அவமதிப்புக்

## யாழ் வளாக ஆசிரியர்கள், மாணவர்கள் அறிக்கை

கும் பழிப்புக்கும் பாரபட்சத்துக்கும் இலக்காகியிருக்கும் நாம்புள்ளிவிபரங்களைச் சம்பந்தப்பட்டவர்களின் முன் வைக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். சம்பந்தப்பட்டவர்கள் புறவயமாக இத்தரவுகளை ஆராய்ந்து தாமே இதுபற்றி முடிவு செய்யும் கடப்பாடு உடையவர்கள்.

யாழ்வளாகம் 1977 இல் மட்டும் விஞ்ஞான மாணிப் பட்டத்திற்கான ஒரு பரீட்சையை நடத்தியுள்ளது. இத்தேர்வு ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் நடைபெற்றது. தமிழில் நடைபெறவில்லை. இத்தேர்வுக்கான பரீட்சகர்களாகத் தமிழரும் சிங்களவரும் கடமையாற்றினர். விடைத்தாள்கள் முதலில் யாழ் வளாகத்தில் புள்ளியிடப்பட்டது. பின் இவை மீள் பார்வைக்காக ஏனைய வளாகங்களுக்கு அனுப்பப்பட்டன. இப்பரீட்சகர்களும் சிங்களவர்களும் தமிழருமாக இருந்தனர்.

1977, மார்கழியில் நடைபெற்ற பொது விஞ்ஞான மாணித் தேர்வுப் பெறுபேறுகள் (கணிதம், புள்ளிவிபரவியல், பொருளியல்)

| | தமிழ் மூலம் | சிங்கள மூலம் |
|---|---|---|
| 1. கற்கை நெறிக்கு அனுமதிக்கப்பட்டோர் | 73 | 30 |
| 2. இறுதித் தேர்வுக்கு தோற்றியோர் | 62 | 30 |
| 3. 1ஆம் 2ஆம் ஆண்டிறுதித் தேர்வுகளிற் சித்தியெய்தாததனுல் இறுதித் தேர்வுக்கு அனுமதிக்கப்படாதோர் | 11 | — |
| 4. மூன்றும் தேர்விற் சித்திபெருதோர் | | |
| கணிதம்/புள்ளிவிபரவியல் | 15 | 04 |
| பொருளியல் | — | 01 |
| 5. சாதாரண சித்திகள் | | |
| கணிதம்/புள்ளிவிபரவியல் | 06 | 05 |
| பொருளியல் | 04 | 01 |
| 6. இரண்டாம் வகுப்பு(கீழ்) | | |
| கணிதம்/புள்ளிவிபரம் | 16 | 10 |
| பொருளியல் | 01 | — |
| 7. இரண்டாம் வகுப்பு (உயர்) | | |
| கணிதம்/புள்ளிவிபரம் | 10 | 06 |
| பொருளியல் | 01 | — |
| 8. முதலாம் வகுப்பு | | |
| கணிதம்/புள்ளிவிபரம் | 09 | 03 |
| பொருளியல் | — | — |

இனவாரியாக இறுதித் தேர்வு விகிதங்கள்

| | தமிழ் | சிங்களம் |
|---|---|---|
| சித்தி பெருதோர் | 24.2 | 16.7 |
| சாதாரண சித்தி | 16.1 | 20.0 |
| இரண்டாம் வகுப்பு (கீழ்) | 27.4 | 33.3 |
| இரண்டாம் வகுப்பு (உயர்) | 17.8 | 20.0 |
| முதலாம் வகுப்பு | 14,5 | 10,0 |

ஒவ்வொரு மொழி மூலத்திலும் தோற்றியவர்களின் பெறுபேற்று விதம்

| | தமிழ் | சிங்களம் |
|---|---|---|
| சித்தியின்மை | 35.6 | 16.7 |
| சாதாரண சித்தி | 13,7 | 20.0 |
| இரண்டாம் வகுப்பு (கீழ்) | 22.3 | 33.3 |
| இரண்டாம் வகுப்பு (உயர்) | 15.1 | 20.0 |
| முதலாம் வகுப்பு | 12.3 | 10.0 |

முதலாம் வகுப்பைத்தவிர ஏனைய தரங்களில் தமிழ் மாணவர்களின் தேர்ச்சி வீதம் குறைவாக உள்ளது என்பதை அட்டவணை காட்டுகிறது. 1974 இல் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து 1977 இல் வெளியேறிய தமிழ்மாணவர்களுள்64.4% மாணவரே சித்தியெய்தினர் என்பதும் அதே ஆண்டுகளுக்குரிய சிங்கள மாணவரில் 83.3 வீதமானோர் சித்தியெய்தினர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ் வளாகத்தில் அதிக முதலாம், இரண்டாம் 'வகுப்புக்கள்' வழங்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனினும் ஏனைய வளாகங்களுடன் ஒப்பிடும் போது யாழ். வளாக 'வகுப்பு'க்களின் தரம் மிக உயர்ந்ததாக வரையறுக்கப்பட்டுள்ளது- ஏனைய வளாகங்களைப் போலல்லாது எமது வளாகத்தில் சிறப்புப் பட்டக் கற்கை நெறியை மேற்கொள்வோர் அனைவரும் பொதுப்பட்டத் தேர்வுக்கும் தோற்றியாகவேண்டும். மேலே குறிப்பிட்ட தேர்தலில் முதல் வகுப்புப் பெற்ற 9 மாணவரில் 8 பேரும் இரண்டாம் வகுப்பு (உயர்தரம்) பெற்ற 11 மாணவரில் 5 பேரும் இரண்டாம் தரம் (கீழ்) பெற்ற 17 பேரில் 2 மாணவரும் சிறப்புப்பட்ட நெறியைச் சேர்ந்தவர்களே. இவர்கள் சிறப்புப்பட்டம் பெறுபவர்களே தவிர இத்தேர்வில் சித்தியெய்தியதற்கான சான்றிதழ்களைப் பெறமாட்டார்கள். இதுவரை எந்தச் சிங்கள மாணவரும் இந்தச் சிறப்புக் கற்கை நெறியில் பயில முன்வரவில்லை. பொதுப்பட்டத்தை மட்டும்கருத்திற் கொள்ளும் போது முதலாம் வகுப்புப் பெற்ற நால்வரில் ஒருவர் மட்டுமே தமிழர் ஏனைய மூவரும் சிங்களவரே.

இத்தேர்வுகள் கணிதத்திலும் புள்ளி விபரவியலிலும் மட்டுமே நடத்தப்பட்டன. இவர்களுள் 8 பேர் பொருளியலையும் ஒரு பாடமாகப் பயின்றனர். இத்தேர்வில் இரசாயனம், பௌதிகம், தாவரவியல். விலங்கியல் போன்ற விஞ்ஞானப் பாடங்கள் இடம்பெறவில்லை. இப்பாடங்களில் உயர்ந்த புள்ளிகளை, அதி உயர்ந்த புள்ளியைக்கூடப் பெறும் வாய்ப்பு உண்டென்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும். இம்மாணவர்கள் மொழிவாரித் தரப்படுத்தல் நடைமுறையிலிருந்த காலத்தில் தெரிவு செய்யப்பட்ட மிகச்சிறந்த க. பொ. த. (உ. த.) தேர்ச்சி பெற்றவர்கள் என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "எந்த வெளிச் சக்திக்கும் நாம் அஞ்சவில்லை! எமது மனச்சாட்சிப்படி செயற்படுகிறோம்!"

## பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உரை!

"இன அமைதியை நிலைநாட்டுவதில் இந்த அரசாங்கம் பெரிய சாதனையை ஏற்படுத்தியுள்ளதாக வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துப் பேசிய நிதியமைச்சர் குறிப்பிட்டார். அவர் மட்டுமல்ல — ராஜாங்க அமைச்சரும் இன ஐக்கியத்தின் அவசியத்தை தமது உரையின்போது அந்தரங்க சுத்தியுடன் வலியுறுத்தினர். அதே போல காணி அபிவிருத்தி அமைச்சரும் அதே போன்று எமக்கு கோரிக்கை விடுத்தார். பிரதமரும் தமக்கேயுரிய முறையில் எமக்கு அதே கோரிக்கையை விடுத்தார்.

"இது அரசாங்கத்தின் ஒரு முகம்; பரீட்சைகளில் நாம் ஏமாற்றுவதாக இங்கே கூறப்பட்ட பொழுது—நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் சமுதாயம் முழுவதன் மீதும் அவமானத்தை அள்ளி வீசும் மற்றோர் முகமும் அரசாங்கத்தில் இருப்பதைக் கண்டோம். நாம் பரீட்சைகளில் முதல் வகுப்பில் தேறிய போதும் கூட— நாம் ஏமாற்றியே அவ்வாறு முதல் வகுப்பில் தேறியதாக கூறப்பட்டது.

ஆர். பிரேமதாசா:- அவர் அப்படிக் கூறவேயில்லை.

அமிர் தலிங்கம்:- பல்கலைக் கழக மசோதா விவாதத்தின் போது அவர் அப்படித்தான் கூறினார். அவர் கூறியதை நீங்கள் மறந்து விட்டீர்கள்.

ஆர். பிரேமதாசா:- அவர் அப்படிக் கூறவேயில்லை; அவர் பரீட்சாதிகாரிகளைப் பற்றித்தான் பேசினாரே தவிர— பட்டம் பெற்றவர்களைப் பற்றிக் கூறவில்லை!

அமிர்தலிங்கம்:- இல்லை, இதன் விளைவு என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? இன்று ஒரு தமிழ்ப் பட்டதாரி நேர்முகப் பரீட்சைக்கு செல்லும் போது அவரிடம் கேட்கப்படும் கேள்வி— "இந்த முறையிலா உமது முதல் வகுப்பை பெற்றுக் கொண்டீர்" என்பதுதான், இந்தக் கேள்விதான் அவர்களிடம் கேட்கப்படுகிறது. நேர்முகப்பரீட்சைக்கு சென்று திரும்பிய ஏராளமான இளைஞர்கள் எம்மிடம் வந்து இவ்வாறு புகார் கூறுகிறார்கள்; முதல் வகுப்பில் டாக்டர் பரீட்சையில் சித்தியடைந்த ஒருவர் கூட ஒரு நேர்முகப் பரீட்சைக்கு சென்ற போது இதுவே அவரிடம் கேட்கப்பட்டது. இது முழுச் சமுதாயத்தின் மீதும் பூசப்பட்ட ஒருகறையாகும்.

மொன்டேகு ஜெயவிக்கிரமா:- இல்லை!

அமிர்:- எனவே இது சம்பந்தமாக முழுமையான விசாரணை ஒன்று நடைபெற வேண்டுமென்று நாம் கோருகிறோம். ஓர் ஆணைக்குழு இது பற்றி ஆராயட்டும்.

டாக்டர் ரஞ்சித்:- இவ்வாறான புகார் இருந்தால்அதை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கூறவும். நேர்முகப் பரீட்சைக்கு சென்றவர் யாருக்காவது இவ்வாறு கூறப்பட்டிருந்தால், அவ்வாறு கூறியவர் மீது நாம் நடவடிக்கை யெடுப்போம்.

அமிர்:- ஏராளமான இளைஞர்கள் இதை எமது கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த வழியாலேதான் பரீட்சைகளில் சித்தியடைந்தார்கள், இந்த வழியாலேதான் முதல்வகுப்பிலே தேறினார்கள்என்றெல்லாம் அலுவலகங்களில் கூட தமிழர்கள் கேலிப்பொருளாக்கப்பட்டு வருகின்றனர். கௌரவ உறுப்பினர்கள் என்னை மன்னிக்கவேண்டும். இதனால் புண்படுத்தப்பட்டிருப்பவர்கள் நாங்கள். செருப்புக் காலில் கடிக்கும் போது, அந்த வேதனை செருப்பை அணிந்திருப்பனுக்கு மட்டும்தான் தெரியும். அது உங்களைக் கடிக்கவில்லை. தயவு செய்து இதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இது எனக்கு 1886ம் ஆண்டு ஆர். எல். ஸ்டீவன்சன் படைத்த ஒரு பாத்திரத்தையே நினைவுக்கு கொண்டு வருகிறது. "டாக்டர் ஜெக்கிலும் மிஸ்டர் ஹைட்டும்" என்பதே அவர் எழுதிய அந்த நாவலாகும். டாக்டர் ஜெக்கில் மனிதாபிமானம் படைத்த ஒரு நல்ல மனிதன் என்பதிலே சந்தேகமில்லை. ஓர் உயிரிலுள்ள தீய குணங்களையெல்லாம் வெளியே கொண்டு வரக்கூடிய ஓர் ஊசிமருந்தை அவர் கண்டு பிடித்தார். எனவே முதலில் அந்த ஊசி மருந்தை தனக்குத்தானே ஏற்றிக்கொண்டார். என்ன நடந்தது? அந்த ஊசி மருந்தின் தாக்கம் அவரது உடலில் சேர்ந்தவுடன், அவர் கொடுமையின் மொத்த உருவமானார். மக்களைத் துன்புறுத்தவும், கொடுமைப்படுத்தவும் தொடங்கினார். டாக்டர் ஜெக்கில்லின் நல்ல குணங்கள் அனைத்தும் மறைந்தது— மிஸ்டர் ஹைட் உருவானார். சில காலம் கழித்து, அந்த மருந்தின் தாக்கம் முடிந்த பின்னர், அவர் பழைய டாக்டர் ஜாக்கில் ஆக மறுபடியும் மாறினார். ஆர். எல். ஸ்டீவன்சன் எழுதிய இந்த நாவலை வாசியாத உறுப்பினர்கள் இருந்தால் அதை வாசிக்கும்படி சிபார்சு செய்கிறேன். காலம் செல்லச் செல்ல, தீமைகளின் ஆதிக்கம் அதிகரித்து, மிஸ்டர் ஹைட்டின் குணப்பண்புகளே அடிக்கடி ஏற்படத் தொடங்கி, இறுதியாகஇந்த டாக்டர் ஜெக்கில் அல்லது மிஸ்டர் ஹைட் தனது நண்பர்களாலேயே சுட்டுக் கொல்லப்பட வேண்டியவரானார். இதுதான்கதை. இது தான் ஸ்டீவன்சன் படைத்த பாத்திரம்.

ஜனாதிபதி மனிதப் பண்பாடு நிறைந்தவர் என்பது எமக்குத் தெரியும். அரசாங்கக் கட்சிப் பின் வரிசை உறுப்பினர்களில் ஏராளமானோர் பிரச்சினையை உணர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அதே சமயத்தில் அதே பின் வரிசையில் மிஸ்டர் ஹைட்டுகளையும் என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. எதிர்காலத்தில் டாக்டர் ஜெக்கில்லின் இடங்களை மிஸ்டர் ஹைட்டுக்கள் பிடித்துக் கொண்டு விடுவார்களோ என்பதும் எமக்குத் தெரியாது. அப்படியான நிலைமை ஏற்படும் போது எமக்கு என்ன நடக்கும்? அங்கேதான் ஆபத்து இருக்கிறது. நான் ஒரே ஒரு உதாரணத்தை இங்கு குறிப்பிட்டேன்.

எனது சட்டக் கல்லூரி நண்பரும், இரத்தக உறுப்பினருமான பாராளுமன்றத் துறை பிரதியமைச்சர் இங்கு நிகழ்த்திய உரையைக் கேட்டு பேரதிர்ச்சியடைந்தேன். அவருடைய உரையின் மொழி பெயர்ப்பை எடுத்துப் படித்தேன். அவரும் நானும் ஒருவரையொருவர் எமது சட்டக்கல்லூரி நாட்களிலிருந்து கடந்த 30 ஆண்டுகளாக அறிவோம். ஆனால் அவர் இச் சபையில் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தேன். அவர் மட்டுமல்ல— இன்னும் பலரும் பேசினார்கள். நான் யார் மீதும் பழிபோடவில்லை. அவர்கள் தாம் எதைக் கூறுகிறோம் என்பதை தெரிந்து கொண்டே பேசுகிறார்கள். இம்மாதிரியான பேச்சுக்களை நிகழ்த்துவதன் மூலம், தாம் இலங்கையின் நலனுக்கு சேவை செய்வதாக அவர்கள் நினைக்கிறார்கள். எமது நிலையை அவர்கள் உணர வேண்டுமென்று கோருகிறேன்.

ஓர் உறுப்பினர்:- நீங்களும் அதேயே செய்கிறீர்கள்!

அமிர்:- அரசியலமைப்பு விவாதத்தின் போது, நான் பேசிய நேரத்தில், எங்களை இந்த நிலைக்குத்தள்ளிய சூழ்நிலைகள், சக்திகள் பற்றி உறுப்பினர்களுக்கு எடுத்து விளக்குவதற்கு என்னால் முடிந்தளவு முயற்சித்தேன். கௌரவ பிரதமர் கூறினார் — "நாம் உங்களை அழைத்துக் கொண்டேயிருக்கிறோம் — நீங்கள் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள்; நீங்கள் வருகிறீர்களில்லை; ஓடுகிறீர்கள்" என்று குறிப்பிட்டார்.

ஆனால் இந்த அழைப்பு— நரி நண்டை விருந்துக்கு வரும்படி விடுத்த அழைப்பு போல இருக்கக்கூடாது, எங்கள் பிரச்சினையை நீங்கள் உணர வேண்டும். உங்கள் கஷ்டங்களை நாங்கள் உணர்கிறோம். உண்மையான காந்திய வாதிகள் என்ற முறையில்— சத்தியாக்கிரக பாதையை உண்மையாகப் பின்பற்றிச் செல்கிறவர்கள் என்ற முறையில், காலஞ் சென்ற தந்தை செல்வநாயகத்தின் உண்மையான தொண்டர்கள் என்ற முறையில்— பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக— பேச்சு வார்த்தை நடத்தி ஓர் ஒழுங்குக்கு வருவதற்கு, ஓர் இணக்கத்துக்கு வருவதற்கு, எப்போதும் நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் இதற்கு பிரச்சினைகளை புரிந்து கொண்டிருப்பது அவசியம்.

கடந்த காலத்தில், காலஞ் சென்ற திரு. பண்டாரநாயகா எமது பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு, எங்கள் தலைவருடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்த போது, அதை யூ. என். பி. எதிர்த்தது. உண்மையைக் கூறப்போ[illegible] கண்டி யாத்திரையை முன்னின்று நடத்தினர். 1665ம் ஆண்டு காலஞ் சென்ற டட்லி சேனநாயகாவும், ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் எமது பிரச்சினையைப் புரிந்து கொண்டு எமது தலைவருடன் உடன்படிக்கை செய்த போது— சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும், நல்லெண்ணெ, மசாலவடை என்று கூச்சலெழுப்பிக் கொண்டு கிளர்ச்சிலிறங்கினர். "டட்லிகே படே மசால வடே" என்றுகோஷமெழுப்பினர். 1966ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி தமிழ் மொழிச் சட்ட விதிகள் கொண்டு வரப்பட்ட போது என்ன நடந்ததென்பது எமக்குத் தெரியும்.

இதை உணர்ந்துதான், இப் பிரச்சினைக்கு ஓர் தீர்வு காண்பதற்காக, சர்வ கட்சி மாநாடொன்று கூட்டப்படும் என்று யூ. என். பி. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தது. பின்னர் இச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட தமது முதலாவது கொள்கைப் பிரகடன அறிக்கையிலும் அவர்கள் இதைக் கூறியிருந்தார்கள். ஆனால் சில நிலைமைகள் மாறியதன் காரணமாக—

ஆர். பிரேமதாசா:- இல்லை, பாராளுமன்றத்தின் தெரிவுக் குழு பற்றி என்ன கூறுகிறீர்கள்?

அமிர்:- அது ஓர் சர்வ கட்சி மாநாடல்ல!

பிரேமதாசா:- ஆனால் சில கட்சிகள் மக்களால் நிராகரிக்கப்பட்டு விட்டன. அதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது.

அமிர்:- இச் சபைக்குத் தனது உறுப்பினர்களை அனுப்புவதில் ஒரு கட்சி வெற்றி பெற்றதோ இல்லையோ— நாட்டில் பல அரசியற்கட்சிகள்இருக்கவே செய்கின்றன. இச் சபையிலுள்ள மூன்று கட்சிகள் மட்டும் தான் நாட்டிலிருக்கின்றன என்பது அல்ல; அக் கட்சிகள் இப் பிரச்சினைக்கு தமது சொந்தத் தீர்வுகளை முன் வைத்துள்ளன. எதிர்காலம் யாருடைய கைகளுக்குப் போகிறதோ யாருக்குத் தெரியும்?

புலிகளோ— சிங்கங்களோ —அல்லது நரிகளோ— எதுவோ ஒரு வெளிச் சக்திக்குப் பயந்துதான்— நாங்கள் சில போக்குகளை— சில நிலைப்பாடுகளை— பின்பற்றுவதாக எடுத்துக்காட்டும் ஒரு முயற்சி இங்கே மேற் கொள்ளப்பட்டது. நாங்கள் எமது கொள்கையின் அடிப்படையிலும்— எமது மனச்சாட்சியின் அடிப்படையிலும் செயற்படுகிறோமே தவிர— எவருக்கும் நாம் அஞ்சவும் மாட்டோம்; பாதையிலிருந்து விலகவும் மாட்டோம் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தப் புலிகள் எங்கேயிருக்கின்றன என்றுஎனக்குத் தெரியாது. இலங்கையில் சிறுத்தைகள் மட்டுமேயுண்டு. நான் இங்கே புலிகள் கிடையாதென்றே நினைத்திருந்தேன். சிங்கங்கள் போலக் கர்ச்சிக்கின்ற சில மனிதர்கள் தாம்இங்கே உண்டே தவிர— இந் நாட்டில் சிங்கங்களும் கிடையாது. எமது மத்தியில் சிங்கங்களும் கிடையாது— புலிகளும் கிடையாது. எந்தக் கற்பனைச் சக்திகளுக்கும் நாம் பயப்படவில்லை.

நாம் சில திட்டவட்டமான கொள்கைகளின் அடிப்படையில் இங்கு வந்திருக்கிறோம். இது அரசாங்கத்துக்குத் தெரியும். அரசாங்கப் பின் வரிசை உறுப்பினர்களும் இதை உணர வேண்டும். இதற்கான பின்னணியென்ன என்பதையும் அவர்கள் உணர வேண்டும். அவர்களின் கஷ்டங்கள் எமக்குத் தெரியும். ஒரு தனிநாடு நிறுவுவதற்கு நேரடியாக அவர்கள் 'ஆம்' என்று கூறி விட முடியும் என்று நாம் சொல்லவில்லை. ஆனால், கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் வெளிப்படுத்திய அபிலாஷைகளை உணர்ந்து அவற்றை ஈடு செய்வதற்கு ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா? அதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

நிதியமைச்சர் அவர்கள், நிர்வாகப்பரவலின் ஒரு படியாக மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டது குறித்து தமது உரையில் தெரிவித்திருந்தார். அது நிர்வாகப்பங்கீட்டின் ஒரு வழிப்பாதையாகும். எந்த விதமாகப் பார்த்தாலும், அது ஒருபோதும் அதிகாரப் பங்கீடு (DEVOLUTION) ஆகாது. மாவட்ட நிர்வாகத்துக்குப் பொறுப்பாக அரசாங்க அதிகாரிக்குப் பதிலாக ஓர் அரசியல் தலைவரை நியமிப்பது அதிகாரப் பங்கீடு ஆகாது. மாவட்ட அமைச்சர் என்பது, முந்திய அரசின் அதிகாரிக்கு இடப்பட்டுள்ள புதியபெயராகும். அதிகாரப் பரவலுக்கு இது வல்ல முறை. ஜனநாயக முறைப்படி இது நடைபெற வேண்டும். மக்களுக்கு இதிலே பங்கு இருக்க வேண்டும்.

இது நாள்வரை தமிழர்களின் கோரிக்கையின் அடிப்படையை உணர்ந்து கொள்வதற்கு எந்தவித முயற்சியும் மேற் கொள்ளப்படவில்லை. இங்கு இடம் பெற்ற கூச்சல், குழப்பம், அனைத்துக்கும் இதுவே காரணம்.

பின் வரிசை உறுப்பினர்கள் தங்களுக்கு கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே பாய்ந்து விழுந்து, சத்தம் போடுவதை விடுத்து— இந்தப் பிரச்சினையை அவர்கள் புரிந்து கொள்ள முயல வேண்டும். இந் நாட்டிலுள்ள சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், அனைவரையும் பாதிக்கக் கூடிய பிரச்சினை இது என்பதை அவர்கள் உணர வேண்டும். எவரும் இதை மறுக்க முடியாது. நீங்கள் அபிவிருத்தி வேண்டுமென்று கருதினால்— இந்தப் பிரச்சினைக்கு நீங்கள் தீர்வு கண்டேயாக வேண்டும். இப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் நீங்கள் அபிவிருத்தியில் முன்னேற முடியாது.

(27-11-78 பாராளுமன்றத்தில்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விசாரணை வேண்டும் என்...

1-ம் பக்கத் தொடர்

முதலே தமிழ் மாணவர்களுக்கு அதிக புள்ளிகள் வழங்கி தமிழ் விரிவுரையாளர்கள் சிங்களமாணவருக்கு எதிராக சதியில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். நித்திரை விழித்துக் கஷ்டப்பட்டுப் படித்த சிங்களமாணவர்கள் எத்தனைபேர் பல்கலைக்கழகம் போக முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர். தமிழ் விரிவுரையாளர்களின் ஏமாற்றுமோசடிகளால் சிங்கள மாணவர்கள் எத்தனை பேர் பாதிக்கப்பட்டிருப்பார்கள்!

''தமிழ் விரிவுரையாளர்கள் கடவுளைவிட அதிக அதிகாரம் கொண்டிருக்கின்றனர்.

''யாழ் வளாகம் ஒரு தனி இனத்துக்கான பல்கலைக்கழகம் அல்ல: அது ஒரு தேசிய பல்கலைக்கழகம் என்று பெயரிடப்பட்டது. ஆனால் இன்று ஒரு சிங்கள மாணவரும் அங்கு இல்லை; எல்லோரையும் அடித்துக் கலைத்து விட்டனர். ஒரு அப்பாவிச் சிங்களமாணவன் கால் முடமாகிச் சக்கர வண்டியில் அவதிப்படுகிறான்

இன்று யாழ்ப்பாணத்தில் சிங்களவர்கள் இல்லை; அங்குள்ள சிங்களவருக்கு கடையில் ஒரு சிகரெட் கூட வாங்க முடியாது.

த. வி. கூட்டணியினர் இனவாதத்தை வட பகுதியில் கிளப்புகின்றனர். அங்கு சிங்கள மக்கள் வசிக்க முடியாதுள்ளது. அவ்வாறே தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் கிளம்பினால் என்ன நடக்கும்?

யாழ் வளாகத்தில் சிங்கள மாணவர்கள் படிக்க முடியவில்லையானால்; தென்னிலங்கையில் தமிழ் மாணவர்கள் படிக்க அனுமதிக்கலாமா என்று சிங்கள மக்களும் கேட்டால், என்னவாகும்?

சிங்களவர்களின் சார்பில் நான் விடுக்கும் கோரிக்கை—இன அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்மதே!''

## போராடுவோம்

இதற்குப் பதிலளித்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், திறமை அடிப்படையில் கல்வி வழங்கப்பட வேண்டுமென்பதே ஐ. நா. சாசனத்தின் கட்டளையென்றும், அதை மீறி இன அடிப்படை புகுத்தப்படுமானால் அதை எதிர்த்துக் கடுமையாக போராடுவோம் என்றும் அறைகூவல் விடுத்தார். தரப்படுத்தலை விட கொடியது இனப்படுத்தல் என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

(கூட்டணிப் பா. உக்களின் உரைகள் சம்பந்தப்பட்ட ஹன்சார்ட் கிடைத்ததும் முழுமையாக சுதந்திரனில் இடம் பெறும்.)





சிக்கன சலவைக்கு மில்க்வைற் பார்சோப் வாங்கி உபயோகியுங்கள். பெரிய பார்சோப்பாகவும், சிறிய பார்சோப்பாகவும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. 10 மேலுறைகளை அனுப்பி அழகிய பொலித்தீன் பையைப் பரிசாகப் பெறுங்கள்.

**மில்க்வைற் யாழ்ப்பாணம்.**

## கெப்பிட்டல்

சிவாஜிகணேசன் - மாலினிபொன்சேகா
விஜயகுமார், ஜெயசித்திரா
மற்றும்பலர் நடித்த—

**பைலட் பிரேம்நாத்**

ஈஸ்மன் கலர்)

## லிடோ (யாழ்நகர்)

**லொறி ட்ரைவர்**

## கிங்ஸ்லி

(கொழும்பு)

சிவாஜி கணேசன், மாலினிபொன்சேகா
விஜயகுமார், ஜெயசித்திரா,

**பைலட் பிரேம்நாத்**

[ ஈஸ்மன் கலர் ]

## கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

எம். ஜி. ஆர். ராதாசலுஜா,
- நடித்த -

**இதயக் கனி**

[புத்தம் புதிய கொப்பி]

## செல்லமகால் 2-வது வாரம்

ஜெமினிகணேசன், சுஜாதா,
கமலஹாசன்- சுமித்ரா,
புரெபசர் விஸ்வநாதன், பண்டரிபாய்,
ஏ. கே. தங்கவேல், சுகுமாரி,
தேங்காய் சீனிவாசன், புஷ்பா நடித்த-

**லலிதா**

( ஈஸ்மன் கலர் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.